தமிழ்த் தென்றல் வாசகம்

முதற்படிவம் சிறப்புப்பகுதி

[illegible].கே. பப்ளிஷிங் ஹவுஸ்
கும்பகோணம்

தமிழ்த் தென்றல் வாசகம்

முதற் படிவம் — சிறப்புப் பகுதி

[புதிய பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது]

THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர்,
வித்வான், ரா. சீனிவாசன்,
தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப்பள்ளி, மாயூரம்.

அன்பளிப்பு
M.A., B.T., M.O.L.
சென்னை-20.

ஸி. வி. கே. பப்ளிஷிங் ஹவுஸ்,
33, பச்சையப்ப முதலித்தெரு, கும்பகோணம்.

பதிப்புரிமை] [விலை அணா 10

முதற் பதிப்பு — 1956

விலை அணா 10

(Printed on: 26 lbs. White Printing Paper —Crown Size)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்

THE MADURA TAMIL SANGAM

நூன்முகம்

தமிழகம் பல துறைகளிலும் முன்னேறி வருவதைப் போன்று, கல்வித் துறையிலும் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறது. எழுத்திலும், பேச்சிலும் அமிழ்தினும் இனிய தமிழ் அளவிலா உயர்வை அடைந்து வருவதை யாவரும் அறிவோம். எழுத்துப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி எனும் இரு பயிற்சிகளும் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாதவை ஆகும். இவ்விரு பயிற்சிகளையும் அடையத் திருத்தமான மொழியறிவு வேண்டும். காலத்திற்கு ஏற்றதாய், கருத்துக்கினியதாய், கற்பார்க்கும் கேட்பார்க்கும் சுவையூட்டுவதாய் அமைந்த நூல்களால் மொழியறிவைப் பெற இயலும். அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தை ஒட்டி இந்நூலை வெளியிடுகிறோம். இந்நூலுள், சில செய்யுட்களை எடுத்தாளுவதற்கு உரிமையீந்த அறிஞர்கட்கு எங்கள் நலம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆசிரியன்மார்கள் இந்நூற்கு ஆதரவுதந்து போற்றவேண்டும். மாணவர் உலகம் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அன்னை தமிழின் அடியிணைகட்கு இம்முதன் மலரைச் சூட்டி மகிழ்கிறோம்.

பதிப்பாளர்.

பொருளடக்கம்

எண் பக்கம்

செய்யுட் பகுதி

எண்		பக்கம்
I.	வாழ்த்து மலர்	... 1
II.	நீதி மலர்	... 4
III.	கதை மலர்	... 9
IV.	வருணனை மலர்	... 14
V.	பல்வகை மலர்	... 16

உரைநடைப் பகுதி

எண்		பக்கம்
(1)	தமிழகம்	... 21
(2)	மாணவர் செஞ்சிலுவைச் சங்கம்	... 27
(3)	வானொலி	... 34
(4)	ஔவையார் தூது	... 42
(5)	பாரதிதாசன்	... 51
(6)	கங்கைகொண்ட காவலன்	... 57

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

த்வசுப நாமே ஜாகே
சுவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை உன் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

செய்யுட் பகுதி

I. வாழ்த்து மலர்

1 சிவபெருமான்

குனித்த புருவமும், கோவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல் மேனியில்பால்வெண்ணீறும்,
இனித்த முடைய, எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇம் மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்

2 கலைமகள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

—கம்பர்

3 இயேசு

அன்புநெறி சிறந்ததென அகிலமுணர்ந் துய்ய
ஆண்டவனே என்செய்தாய் அதைநினைத்தால் அந்தோ!
என்புருகும் உயிருருகும் எண்ணமெல்லாம் உருகும்
எம்மொழியால் இயம்பவல்லேன் ஏழைமகன் அப்பா.

—திரு. வி. க.

குறிப்புரை

ஆசிரியர்:

1. *திருநாவுக்கரசர்*, சைவ சமய குரவர்கள் நால்வருள் ஒருவர். இவருடைய இயற்பெயர் மருள்நீக்கியார் என்பதாம். இவருக்கு அப்பர், வாகீசர் என்ற பெயர்களும் உண்டு.

இவருக்குத் திலகவதியார் என்ற தமக்கையார் இருந்தார். இவர் சிவபெருமான் அருளால் பல அற்புதங்கள் செய்தார். இவர் கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

2. கம்பர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரிற் பிறந்தவர். சிறந்த கவிஞர். வைணவ மதத்தவர். இவர் இராமாயணம் என்னும் காவியத்தையும், ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி முதலிய நூல்களையும் பாடியுள்ளார். இவரை, திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பர் என்ற வள்ளல் ஆதரித்தார்.

3. திரு. வி கல்யாணசுந்தரனுர் 20-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அறிஞர். தமிழ்ப் பற்றும், நாட்டுப்பற்றும் கொண்டவர். தொழிலாளர்க்காகப் பல நன்மைகளைச் செய்தவர். இவர் பல பாடல்களையும், உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்

சொற்பொருள் :

1. குனித்த – வளைந்த. கொவ்வை - கொவ்வைக்கனி (கோவைப்பழம்). செவ்வாய் – சிவந்தவாய். குமிண்சிரிப்பு—புன்சிரிப்பு. பனித்த – விரிந்த. மேனி - உடல். நீறு – திருநீறு (விபூதி). பாதம் – திருவடி. மாநிலம் – உலகம். மனித்தப் பிறவி—மனிதப்பிறவி.

2. ஏய-பொருந்த. உரு-வடிவம். பளிங்கு-பளிங்குக்கல். (இது தெளிவாகவும், தூய்மையாகவும் இருக்கும்) இடர்-துன்பம்.

உரு பளிங்கு போல்வாள் எனவும், இருப்பள் இங்கு வாராது இடர் எனவும் பிரித்திடுக.

3. அகிலம்-உலகம். (உலகத்து மக்கள்)உய்ய - நல்வழிப்படுமாறு. அந்தோ-இரக்கத்தைக் காட்டும் குறிப்புச்சொல். என்பு-எலும்பு. இயம்ப-சொல்ல. ஏழை மகன்-அறிவில் குறைந்தவன்.

வினக்கள் :

1. திருநாவுக்கரசர் மனிதப் பிறவி ஏன் வேண்டுமென்கிருர்?

2. கம்பர் கலைமகளை எவ்வாறு போற்றியுள்ளார்?

3. திரு. வி. க. அவர்கள் இயேசுவை நோக்கிக் கூறுவதென்ன?

பயிற்சி :

1. செம்மை + வாய் = செவ்வாய். வெண்மை + நீறு = வெண்ணீறு. பொன் + பாதம் = பொற்பாதம். மா + நிலம் = மாநிலம். என் + அம்மை = என்னம்மை. வாராது + இடர் = வாராதிடர். என்பு + உருகும் = என்புருகும். எ + மொழி = எம்மொழி.

2. செங்கண், வெண்ணிலா, பொற்கமல், என்னப்பன், அன்புருவம், அவ்வழி— இவற்றைப் பிரித்துக் காட்டுக.

3. அன்பு + நெறி = அன்புநெறி. இங்கு சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்வதைப் பார்க்கிறோம். இவ்வாறு, சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேருவது புணர்ச்சி என்று சொல்லப்படும். நாம் முதலில் எடுத்துக் கொள்ளும் சொல்லை நிலைமொழி என்று சொல்லவேண்டும். அதனுடன் வந்து சேரும் சொல்லை வருமொழி என்று சொல்லவேண்டும்.

4. ஏழை + மகன் = ஏழை மகன். இங்கு இரண்டு சொற்களும் ஒன்று சேரும்பொழுது மாறுபாடே இல்லை. இவ்வாறு ஒருவித மாறுபாடும் இல்லாமல் இயல்பாகச் சேர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

5 பொன் + பாதம் = பொற்பாதம். இங்கு இரண்டு சொற்களும் ஒன்று சேரும்பொழுது 'ன்' என்ற எழுத்து 'ற்' என்ற எழுத்தாக மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு மாறுபட்டு வந்து சேருவது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

6. கீழ் வருவனவற்றுள், இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி இவைகளைக் கூறுக:- பனித்த சடை, பொற்கமல், அன்பு மனம், உருப்பளிங்கு, மாநிலம், எம்மொழி, அறிவுக் கடல், பசி வந்தது.

II. நீதி மலர்

1. மூதுரை

கற்றவர் சிறப்பு

1. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்;—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு.

நல்லோர் இயல்பு

2. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்;—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

—ஔவையார்

2. நன்னெறி

ஈகை மறவாதே

1. எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து) என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி.

அறிவால் உயர்வுகொள்

2. ஆக்கும் அறிவால் அலது பிறப்பினால்
மீக்கோள் உயர்விழிவு வேண்டற்க;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண்(டு); என்றும்
கவரார் கடலின் கடு.

—சிவப்பிரகாசர்

3. நீதிநெறி விளக்கம்

கெடுவது காட்டும் குறி

1. நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாவரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி(து) ஆதல்
கெடுவது காட்டும் குறி.

கருமமே கண்ணுக ஒழுகு

2. மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணுயி னுர்.

—குமரகுருபரர்

4. தனிப்பாடல்

பிறவிப் பண்புகள்

1. சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

செருக்கு கொள்ளாதே

2. கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிருள்;—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்!
எறும்புந்தன் கையாலெண் சாண்.

—ஔவையார்

குறிப்புரை

ஆசிரியர் :

1. ஔவையார் என்னும் அருந்தமிழ் மூதாட்டியை அறியாதவர் இல்லை. குழந்தைகள் முதல் பெரியோர் வரை யாவருக்கும் நீதி கூறித் தமிழ் வளர்த்தவர் இவர்.

2. சிவப்பிரகாசர் துறவி ஆவார். வீர சைவ மதத்தைக் கடைப்பிடித்தவர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சொல் அழகும் பொருள் அழகும் பொருந்தப் பல நூல்கள் பாடியுள்ளார் இவர்.

3. குமரகுருபரர், ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரிற் பிறந்தவர். முருகன் அருளால் ஐந்தாம் வயதில் ஊமை நீங்கப் பெற்றவர். கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய பிரபந்தங்கள் சுவை மிக்கவையாக இருக்கும்.

சொற்பொருள் :

1. 1. மாசு-குற்றம். சீர் தூக்கின்-பெருமையை ஆராய்ந்து பார்த்தால்.

2. சாந்துணையும்-சாகும் காலம் வரை. தீயன-தீமையான செயல்கள். ஆந்துணையும்-இயன்ற வரையிலும். குறைக்கும்-வெட்டும். மறைக்கும்-வெயிலினை மறைக்கும்.

2. 1. நல்கூர்ந்தான்-வறுமை அடைந்தான். இரப்பார்-யாசிப்பார். ஈகை-கொடுத்தல். பைந்தொடீ-பசும்பொன்னால் செய்யப்பட்ட வளையலை அணிந்த பெண்ணே. நில்லா-நின்று விளங்கும். அரம்பை-வாழை மரம். கனி-பழம்.

2. ஆக்கும்-உயர்வு தரும். மீக்கொள்-மேன்மையாகக் கொள்ளும். வேண்டற்க-விரும்பத்தக்கதன்று. அரவு-நாகம். மணி-(நாக)இரத்தினம். கவரார்-கொள்ளமாட்டார். கடு-விடம்.

3. 1. நட்டல்-சேர்ந்துகொள்ளுதல். ஒற்று-ஒற்றர். ஐயுறுதல்-சந்தேகம்கொள்ளுதல். தக்கார்-தகுதி வாய்ந்த

பெரியோர். நெடுமொழி-அறிவுரை. கோறல்-கேளாமல் விட்டு விடுதல். குணம்-நற்குணங்கள். பிறிது ஆதல்-வேறுபடுதல்.

2. மெய்-உடல். துஞ்சார்-உறங்கமாட்டார். செவ்வி-காலம். அவமதிப்பு-இகழ்ச்சிச் சொல். கருமம்-காரியம்.

4. 1. சித்திரம்-சுவரில் எழுதப்படுவது ஆகும். நித்தம்-தினந்தோறும். தயை-இரக்கம். கொடை-கொடுத்தல்.

2. கலைமடந்தை-கலைத்தெய்வமான சரசுவதி. மெத்த-மிகவும். பந்தயம்-போட்டிக்காகச் சொல்லும் சொல்.

விஞக்கள் :

1. மன்னன், கற்றவன்—இவர்களில் சிறப்புடையவர் யார்? ஏன்?

2. அறிவுடையோர் இயல்பு யாது? எதுபோல?

3. 'கன்றும் கனி உதவும்'—இதனால் அறிவது யாது?

4. பிறப்பினால் உயர்வு தாழ்வு கொள்ளக்கூடாது—ஏன்? விளக்குக.

5. கெடுவது காட்டும் குறிகள் யாவை?

6. கருமமே கண்ணாயினார் எவ்வாறு ஒழுகுவர்?

7, பிறவிக் குணங்கள் எவை?

8. 'எறும்பும் தன் கையால் எண் சாண்'—இதனால் அறியும் நீதி யாது?

பயிற்சி :

1. மன்னன் + கு = மன்னற்கு சாம் + தனை = சாந்தனை பசுமை + தொடி = பைந்தொடி. பயன் + உதவி = பயனுதவி. உயர்வு + இழிவு = உயர்விழிவு. கொல் + தல் = கோறல். மண் + அளவு = மண்ணளவு.

2. கற்றோர்க்கு, ஆந்தனை, செந்தமிழ், உலகளவு, பயனளி, கண்ணழகு—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

3. மன்னற்கு, மன்னர்கு—இவ்விரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.

4. உயர்வு, கற்றவன், குளிர், நிழல், இரப்பார், பருமணி, பிரித்தல்—இச்சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் கூறுக.

5. தேசம், பயன், குளிர் நிழல், பகை, கொடை—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

6. சித்திரம், சிற்பம்—இவற்றிற்கு உள்ள வேறுபாடு களைக் காண்க:—

(உதாரணம்)

சித்திரம்	சிற்பம்
1. சுவரில் எழுதப்படுவது.	1. கல்லில் செதுக்கப்படுவது.
2.	2.
3.	3.

7. வாழை + பழம் = வாழைப்பழம்—'ப்' – தோன்றல்.
கல் + சட்டி = கற்சட்டி—'ல்' 'ற்' – ஆகத் திரிதல்.
மரம் + வேர் = மரவேர்—'ம்' – கெடுதல்.

இவை விகாரப் புணர்ச்சிகளாம். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும்.

8. அ + கடிதம் = அக்கடிதம்.
இ + புத்தகம் = இப்புத்தகம்.
உ + வீடு = உவ்வீடு.
எ + பொருள் = எப்பொருள்?

இவற்றில் அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களின் முன்னும், 'எ' என்னும் வினா எழுத்தின் முன்னும் வருமொழி கள் வரும்பொழுது மிகுந்து வந்துள்ளன. சுட்டெழுத்துக் களின் முன்னும், வினாவெழுத்துக்களின் முன்னும் வருமொழி வந்தால் மிகுந்து வரும்.

III. கதை மலர்

புத்திமானே பலவான்

1\. குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்ற தொன்றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி,

2\. "ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் றாக
ஊணுனக் களிப்போம்" என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்(டு)ஒவ் வொன்றாய்
அருந்தியங் கிருக்கும் நாளில்,

3\. தனிமுயல் ஒன்றுக்(கு) ஓர்நாள்
தன்முறை வருத லோடும்
இனிஅது விடாது நம்மை
எனினும் ஓர்எடுப் பெடுத்து
வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்கும்நற் புகழுண் டன்றே,

4. கருதியச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி,
வருதலும், முயலை நோக்கி,
"மன்னன், நம்பசி வேளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவதேன்? உரைநீ!" என்று
மனத்தினிற் சினந்து கூற,

5. "ஐய!நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன்; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யஉன் பக்கல் வந்தேன்
சுவாமி!"என்(று) இறைஞ்சி நிற்க,

6. "சிங்கம்நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வா"யென்(று)
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை எட்டிப் பார்த்து
அதன்நிழல் உருவம் தோன்ற,

7. தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்று பங்கத் தழுந்தித்
துளங்கியே உயிரி ழந்தது;
என்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாம்நாம்.

—பஞ்ச தந்திரக் கதை

குறிப்புரை

ஆசிரியர் :

பஞ்ச தந்திரக் கதைகளை இயற்றியவர் வீரமார்த்தாண்ட தேவர் ஆவார். சிறந்த புலமை உடையவர் இவர். இவர் பாடல்களில் எளிமையும் இனிமையும் காணலாம். இவர் காலம் இன்னது எனத் தெரியவில்லை.

சொற்பொருள் :

1. குறுமுயல்-சிறுமுயல். செறியும்-அடர்ந்த. உறு விலங்கு-வசிக்கும் மிருகங்கள். ஊன்-மாமிசம். வெறிகொடு-மனம்போனவாறு வெறிகொண்டு.

2. அடவி-காடு. விதம்-வகை. ஊண்-உணவு. ஆணை-கட்டளை. அருந்தி-உண்டு.

3. எடுப்பு-உபாயம் (தந்திரம்) உய்ந்தோம்-பிழைத்தோம். வினை-காரியம். நனிவிலங்கு-மிகுதியான மிருகங்கள். அன்றே-அல்லவா.

4. கருதி-எண்ணி. கடும்பசி-மிகுந்த பசி. தப்பி-கடந்து. வேளை-நேரம். மதவேழம்-மதங்கொண்ட யானை. உரை-சொல். சினந்து-கோபித்து.

5. ஐய-தலைவனே. வெய்ய-கொடிய. வெருவி-பயந்து. பைய-மெல்ல. பருமுழை-பெருங்குகை. துய்ய-(சொன்ன சொற்படி நடக்கும்) தூய்மையான. பக்கல்-பக்கம். இறைஞ்சி-பணிந்து.

6. பங்கம்-சேறு. புனல்-சேறு கலந்த நீர். பாழ்ந்துரவு பாழுங்கிணறு. நிழல் உருவம்-நிழல் வடிவம்.

7. சத்துரு-பகைவனாகிய சிங்கம். துன்று-மிகுதியாக இருந்த. துளங்கி-உடல் நடுங்கி. உபாயம்-தந்திரம்.

வினாக்கள் :

1. சிங்கம் காட்டில் எவ்வாறு வாழ்ந்து வந்தது?
2. சிங்கத்தின் செயலைக் கண்ட விலங்குகள் என்ன செய்தன?
3. முயல் என்ன நினைத்தது?
4. சிங்கம் கோபம் கொள்ளக் காரணமென்ன?
5. சிங்கம் முயலை நோக்கிக் கோபித்துக் கூறியதென்ன?
6. முயல் அதற்கு எவ்வாறு பதில் அளித்தது?
7. முயலின் பதிலைக் கேட்ட சிங்கம் என்ன செய்தது?
8. சிங்கம் எவ்வாறு உயிர் இழந்தது?
9. இக்கதையால் அறியும் நீதி யாது?

பயிற்சி :

1. குறுமை + முயல் = குறுமுயல். ஒன்று + உண்டு = ஒன்றுண்டு. இளமை + சிங்கம் = இளஞ்சிங்கம். ஊண் + உனக்கு = ஊணுனக்கு. நல் + புகழ் = நற்புகழ். ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று. மதம் + வேழம் = மதவேழம். பாழும் + துரவு = பாழ்ந்துரவு. தன் + உரு = தன்னுரு.

2. கடும்பசி, எடுப்பெடுத்து, உயிரிழந்து, அங்கதை, பருமுழை, தினமொன்று—இச்சொற்களைப் பிரித்துக் காட்டுக.

3. கடும்பசி, முழை, ஊன், ஊண், உரை, வேட்டை—இச்சொற்களைக்கொண்டு வாக்கியங்கள் தயார் செய்க.

4. ஊண்—ஊன்; உறு—உரு;—இவற்றுக்குள்ள வேறுபாடுகளைக் கூறுக.

5. ஆடி + ஊன் = ஆடி + (ய்) + ஊன் = ஆடியூன்.
தீ + உறைத்தது = தீ + (ய்) + உறைத்தது = தீயுறைத்தது.
வேட்டை + ஆடி = வேட்டை + (ய்) + ஆடி = வேட்டையாடி.

நிலைமொழிச் சொற்களின் இறுதியில் வந்த இ, ஈ, ஐ இவற்றின் முன் உயிர் எழுத்துக்களான, ஊ, உ, ஆ-இவை வந்ததால் இடையில் 'ய்' தோன்றியது. இ, ஈ, ஐ-முன் உயிர் எழுத்துக்கள் வருமானால் இடையில் 'ய்' தோன்றும்.

6. சத்துரு + என்று = சத்துரு + (வ்) + என்று = சத்துருவென்று
உரு + அழகு = உரு + (வ்) + அழகு = உருவழகு
கோ + இல் = கோ + (வ்) + இல் = கோவில்

நிலைமொழியின் இறுதியில் இ, ஈ, ஐ-இவை தவிர ஏனைய எழுத்துக்களான அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ-இவை வந்து வருமொழிமுன் உயிர் எழுத்துக்கள் வருமானால் இடையில் 'வ்' தோன்றும்.

7. சே + அடி. சே + (ய்) + அடி = சேயடி.
சே + (வ்) + அடி = சேவடி.

நிலைமொழியிறுதியில் வரும் 'ஏ' முன் உயிர் எழுத்துக்கள் வருமானால் 'ய்' 'வ்'—என்னும் இரண்டும் இடையில் வரும்.

8. கீழ் வருவனவற்றைச் சேர்த்து எழுதி, இடையில் தோன்றும் எழுத்தையும் குறிப்பிடுக:—

மணி + அழகு, மா + இலை, தீ + அணை, பனை + ஓலை, சென்ற + இடம், செவ்வி + அருமை.

IV. வருணனை மலர்

விண்மீனும் வெண்மதியும்

கானெலாம் மலர்ந்த முல்லை ககனமீ(து) எழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற் றம்மா! (1)

—திருத்தக்கதேவர்

ஆலமரம்

ஆயிரம் கிளைகள் கொண்ட அடிமரம் பெரிய யானை
போயின மிலார்கள் வானில் பொலிந்தன பவளக் காய்கள்
காயினை நிழலால் காக்கும் இலைஎலாம் உள்ளங் கைகள்
ஆயஊர் அடங்கும் நீழல் ஆலிடைக் காண லாகும். (2)

—பாரதிதாசன்

குறிப்புரை

ஆசிரியர் :

1 *திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணி என்ற காவியத்தைப் பாடியவர். சீவக சிந்தாமணி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இவர் இளமையிலே துறவு பூண்டு, சைன மதத்தைப் பின்பற்றியவர். இன்றைக்குச் சுமார் 1600 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்பர்.*

2. *பாரதிதாசனின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் என்பதாகும். இவர் புதுச்சேரியில் வாழ்ந்து வருகிறார். இவருக்குப் புரட்சிக் கவிஞர் என்ற சிறப்புப் பெயர் உண்டு. பாரதியாரின் மாணவர் இவர். முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்டு கவிதைகள் பாடுவதில் வல்லவர்.*

சொற்பொருள் :

1. கான் - காடு; ககனம் - ஆகாயம்; வான் - ஆகாயம்; வயங்கு - விளங்கும்; தாரை - நட்சத்திரங்கள் (விண்மீன்கள்) நிரைநிரை - வரிசை வரிசையாக; வேனிலான் - மன்மதன்; கும்பம் - குடம்; தூ - தூய்மையான; நிலா - நிலவொளி; மதியம் - சந்திரன்; குணதிசை - கீழ்த்திசை.

2. மிலார்கள் - சிறுசிறு கிளைகள்; பொலிந்தன - விளங்கின; நீழல் - நிழல்.

வினாக்கள் :

1. நட்சத்திரங்கள் எவ்வாறு காட்சியளித்தன?
2. சந்திரன் எங்கு, எவ்வாறு தோன்றியது?
3. ஆலமரத்தைப் பற்றி ஆசிரியர் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?

பயிற்சி :

1. வெண்மை + கும்பம் = வெண்கும்பம்.
   தூய்மை + நிலா = தூநிலா
   குணக்கு + திசை = குணதிசை
   பவளம் + காய் = பவளக்காய்
   அகம் + கை = அங்கை

2. வெண்மதி, தூமதி, குடதிசை, பவளக்கொடி — இச்சொற்களைப் பிரித்துக் காட்டுக.

3. முல்லை, நிரை நிரை, குணதிசை, அடிமரம், மிலார்கள், விழா — இவற்றை வாக்கியங்களில் அமைக்கவும்.

4. அகங்கை, குணதிசை, மலர்தல், எழுதல், அடிமரம், நிழல் — இவைகட்கு எதிர்ச்சொற்கள் கூறுக.

5. கண்ணன் காலையில் எழுந்தான்.
   கண்ணன் கடவுளைத் தொழுதான்.
   கண்ணன் வேலைக்குச் சென்றான்.

இம்மூன்று வாக்கியங்களையும் சேர்த்து எழுதலாம். 'கண்ணன்' என்ற சொல் மூன்றிலும் வந்துள்ளது. எழுதல், தொழுதல், செல்லுதல் மூன்றினையும் செய்தவன் கண்ணனே. ஆகவே, 'கண்ணன் காலையில் எழுந்து, கடவுளைத் தொழுது, வேலைக்குச் சென்றான்' என்று ஒரே வாக்கியமாக அமைக்கலாம்.

6. கீழ் உள்ளதை ஒரே வாக்கியமாக எழுதுக:
சிங்கம் காட்டில் அலைந்தது.
சிங்கம் கடும்பசி கொண்டது.
சிங்கம் களைத்துப் படுத்தது.

7. கீழ் வருவதை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக:

கந்தன் பொய் பேசி, அடிபட்டுச் சிறை சென்றான்.

V பல்வகை மலர்

தமிழகச் சிறப்பு

(1) வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

— ஔவையார்

ஆறுதலை

(2) சங்கரற்கும் ஆறுதலை; சண்முகற்கும் ஆறுதலை;
ஐங்கரற்கும் மாறுதலை ஆனதே;—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை; பித்தா நின்பாதம்
பிடித்தோர்க்கும் ஆறுதலைப் பார்.

— காளமேகம்

இழிவும் உயர்வும்

(3) ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

— கழைதின் யானையார்

தமிழ் நாடு

(4) நீலத்திரைக் கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு. 1.

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. 2.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. 3.

— பாரதியார்

குறிப்புரை

ஆசிரியர் :

1. ஔவையார் — முற்பகுதியில் காண்க.

2. காளமேகப் புலவர் கும்பகோணத்தைச் சேர்ந்தவர். திருவரங்கம், திருவானைக்காவல் என்னும் இரு தலங்களிலும்

தொழில் செய்தவர் இவர். வசைபாடுவதிலும், ஆசுகவி பாடுவதிலும் சமர்த்தர். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

3. 'கழைதின் யானை' என்ற சொல்லை வைத்துப் பாடினமையால் இவருக்கு இப்பெயர் வந்தது. இவரது பாடல் புறநானூறு என்ற நூலில் உள்ளது.

4. பாரதியார் 20-ஆம் நூற்றாண்டுக் கவிஞர். இவர் 35 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். இவரை அமரகவி, தேசிய கவி, வரகவி என்றெல்லாம் போற்றுகிறார்கள். கவிதைகள் இயற்றுவதில் இவருக்கு இணை இவரேயாவர். இவரை கவிதை உலகத்தின் வழிகாட்டி என்னலாம்.

சொற்பொருள் :

1. வேழம் - யானை; மலைநாடு - சேரநாடு; மேதக்க - மேன்மை பொருந்திய; பூழியர் – பாண்டியர்; தென்னாடு - பாண்டிய நாடு; தெண்ணீர் - தெளிந்த நீர்; சான்றோர் - கல்வி கேள்விகளில் வல்லவர்.

2. சங்கரன் - சிவன்; ஆறுதலை - தலையில் கங்கையாறு உள்ளது; ஐங்கரன் - விநாயகன்; மாறுதலை - (மாறான) யானைத்தலை; சங்கைப் பிடித்தோர் - திருமால்; மாறுதலை - மாறுபட்ட தலைகள், (பத்து அவதாரங்களுள் மாறுபட்ட தலைகளைக் குறிக்கும்); பித்தா - இறைவா; ஆறுதல் - அமைதி.

3. இரத்தல் - யாசித்தல்; இழிந்தன்று - இழிந்தது; அதன் எதிர் - அதற்கு மாறாக; ஈயென - கொடுங்கள் என்று; ஈயேன் - கொடுக்கமாட்டேன்; கொள் - பெற்றுக்கொள்; உயர்ந்தன்று - உயர்ந்தது; கொள்ளேன் - பெற்றுக்கொள்ள மாட்டேன்; என்றல் - என்று கூறுதல்.

4. திரை - அலை; குமரி - கன்னியாகுமரி; வடமாலவன் குன்றம் - திருப்பதி மலை (வேங்கடமலை); மண்டி - நிறைந்து; பார் - பூமி; வான்புகழ் - பரந்த புகழ்; நெஞ்சு - மனம்; அள்ளும் - மகிழச் செய்யும்; மணி ஆரம் - மணிமாலை.

வினாக்கள் :

1. ஔவையார் குறிப்பிடுகின்ற நாடுகள் எவை ?
2. அவற்றினை எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார் ?
3. காளமேகப் புலவர் சாதுரியமாகப் பாடிய பாடலின் கருத்து யாது ?
4. எது இழிந்தது? எது உயர்ந்தது ?
5. தமிழ் நாட்டின் சிறப்பினைக் கூறுக.

பயிற்சி :

1. வளமை + நாடு = வளநாடு
   தெற்கு + நாடு = தென்னாடு
   தெள் + நீர் = தெண்ணீர்
2. பிரித்துக் காட்டுக :—
   வளவயல், தென்மேற்கு, உண்ணீர்மை, மணியாரம்.
3. வாக்கியங்களில் அமைக்க :—
   வளநாடு, ஆறுதல், குமரி, கம்பன், மணி ஆரம்.
4. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுதுக :—
   (அ) மலைநாடு ———— உடையது.
   (ஆ) சண்முகற்கு ———— உள்ளது.
   (இ) ஈயென இரப்பது ————
   (ஈ) ———— தமிழகத்தின் வடக்கு எல்லை.
5. எதிர்ச்சொற்கள் கூறுக :—
   இரத்தல், உயர்ந்தது, புகழ், பிறப்பு, தெண்ணீர்.

6. இரத்தல்—இறத்தல்; கொள்—கொல்; திரை—திறை; மனம்—மணம். இவைகளுக்குள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள்



1. தமிழகம்

1. தமிழ் மொழி வழங்கும் பகுதி தமிழகம் எனப் படும். தமிழகம் முற்காலத்தில் எவ்வாறு இருந்தது? இடைக் காலத்தில் எங்ஙனம் விளங்கியது? தற் பொழுது உள்ள நிலை என்ன? என்பதைப் பற்றி அறிய வேண்டியது அவசியமாகுமல்லவா?

2. பண்டைக் காலத்தில் தமிழகம் மிகப் பெரிய நிலப் பரப்பாக இருந்தது. ஆத்திரேலியாக் கண்டம் முதல் ஆப்பிரிக்கா கண்டம் வரையுள்ள கடற்பகுதி முழுவதும் அது பரவியிருந்தது. அதனைக் 'குமரிக் கண்டம்' என்று வழங்கி வந்தனர். அக்கண்டத்தில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. குமரி மலை, குமரியாறு, பஃறுளியாறு முதலியன அந்நாட்டில் இருந் தன. தலைச் சங்கம், இடைச் சங்கம் என்ற இரு தமிழ்ச் சங்கங்களும் அக்கண்டத்தில்தான் நடை பெற்றன. கடல்பொங்கி எழுந்ததால் அக்கண்டம் கடலுக்குள் மூழ்கிவிட்டது.

3. குமரிக் கண்டம் கடலால் அழிந்தபின் மதுரை நகரில் மூன்றும் தமிழ்ச் சங்கம் தோன்றியது. இதனைக் 'கடைச் சங்கம்' என்பர். இச்சங்கத்தில் நக்கீரர் என்ற புலவர் தலைமையில் நாற்பத்தொன்பது புலவர்கள் கூடித் தமிழை வளர்த்தனர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல்கள் தொகுக்கப் பட்டன. கடைச் சங்க காலத்தில் தமிழ்மொழி சிறப்புடன் செழித்தோங்கியது.

4. வடக்கே வேங்கட மலையும், தெற்கே கன்னியாகுமரி முனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் தமிழகத்தின் எல்லைகளாக விளங்கின. இதனை "வட வேங்கடம் தென்குமரி ஆயிடை, தமிழ் கூறும் நல்லுலகம்" என்று புலவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

5. தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச மரபினர் ஆண்டு வந்தனர். அவர்கள் முறை தவறாமல் செங்கோல் ஆட்சி செய்தனர். தமிழை நன்கு வளர்த்து வந்தனர். தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் பேணி வந்தனர்.

6. சோழநாடு என்பது தற்பொழுதுள்ள திருச்சி, தஞ்சை மாவட்டங்களையும், புதுக்கோட்டைச்சீமையின் ஒரு பகுதியையும் கொண்டதாகும். சோழ நாட்டை ஆண்ட மன்னர்களுள் '**கரிகால் வளவன்**' சிறந்து விளங்கினான். இவன் இமயமலை வரை படையெடுத்துச் சென்றான். அம்மலையில் சோழர்க்குரிய புலிக்கொடியைப் பொறிக்கச் செய்தான். சோழநாடு நிலவளம், நீர்வளம் மிக்கதாக இருந்தது. இதனைச் 'சோழவளநாடு சோறுடைத்து' என்று ஔவையார் சிறப்பித்துள்ளார். சோழர்க்கு உரிய மாலை ஆத்தியாகும். புகார் நகரமும், உறையூரும் சோழ நாட்டின் தலைநகரங்களாக இருந்தன.

7. பாண்டிய நாடு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் உள்ள பகுதியாகும். பாண்டியர்களுள் தலைசிறந்தவர்கள் '**ஆரியப் படை கடந்த**

நெடுஞ்செழியனும்' 'தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனும்' ஆவர். மூவேந்தர்களும் தமிழை வளர்த்தபோதிலும் சங்கம் வைத்து மொழி வளர்த்த சிறப்பு பாண்டியர்களையே சேரும். பாண்டிய நாடு முத்திற்குப் பெயர்போனது. 'பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து' என்று சிறப்பித்துள்ளார் ஔவையார். பாண்டியர்கட்கு உரிய கொடி மீன் கொடியாகும். அவர்க்குரிய மாலை வேம்பு ஆகும். பாண்டிய நாட்டின் தலைநகரமாக மதுரை இருந்துவந்தது.

8. சேரநாடு மலைவளம் நிரம்பிய பகுதியாகும். மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள மலையாளம், தென்கன்னடம், திருவாங்கூர்-கொச்சி என்னும் பகுதிகள் அக்காலத்திய சேரநாடாக இருந்தன. சேர மன்னர்களுள் சிறந்தவன் செங்குட்டுவன் ஆவான். இவன் செய்த செயல்களுள் சிறந்த ஒன்று, கண்ணகிக்குக் கோயில் எடுத்து வழிபட்டதாகும். இவனுடைய இளவலே சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகள் ஆவார். ''வேழம் உடைத்து மலை நாடு' என்று சிறப்பிக்கப்பட்டதால் இந்நாட்டில் யானைகள் மிகுதியாக இருந்தன என்று அறியலாம். சேரர்களுக்கு உரிய கொடி விற்கொடியாகும். பனம்பூ மாலை இவர்களது மாலையாகும். வஞ்சிமா நகரம் சேர நாட்டின் தலைநகரமாய்த் திகழ்ந்தது.

9. தமிழகத்தில் கபிலர், பரணர், சாத்தனார், இளங்கோ, வள்ளுவர், கம்பர் முதலான சிறந்த இலக்கியப் புலவர்கள் வாழ்ந்தனர். அகத்தியர், தொல்காப்பியர், பவணந்தி முனிவர் முதலான இலக்கணப் புலவர்கள் வாழ்ந்தனர். தற்காலக் கவிஞர்களான

அமரகவி பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை என்னும் இருவரும் தமிழகத்தில் தமிழ் மொழிக்குப் புதுமை வழிகாட்டிச் சென்றனர். அவர்களைப் போலவே, இனிய எளிய நடையில் பாரதிதாசன் சுத்தானந்த பாரதியார், இராமலிங்கம் பிள்ளை முதலியவர்கள் பாடல்கள் பாடி வருகின்றனர்.

10. இவ்வாறு சீரும் சிறப்புமாக விளங்கி வந்த தமிழகம் தற்காலத்தில் தன்னளவிற் சுருங்கி உள்ளது. தற்பொழுது தமிழ் சிறப்பாகப் பேசப்படும் இடங்களாக ஒன்பது மாவட்டங்களே உள்ளன. தமிழகத்தைச் சிறப்பித்துப் பாரதியார்,

> "செந்தமிழ் நாடென்னும் போதினிலே-இன்பத்
> தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாடியுள்ளார்.

அருஞ் சொற்பொருள்:

பண்டை - பழைமை. வடவேங்கடம் - வடக்கே உள்ள திருப்பதி மலை. தென்குமரி - தெற்கேயுள்ள குமரி முனை. ஆயிடை - இடைப்பட்ட நிலப்பகுதி. முறை தவறாமல் - நீதியிலிருந்து மாறுபடாமல். புலவர் - அறிவுடையவர். மாவட்டம் - ஜில்லா எனப்படுவதன் தமிழ்ச் சொல். பொறிக்க - செதுக்க. புகார் - காவிரிப்பூம்பட்டினம் என்னும் ஊர். ஆரியப் படை - வடநாட்டுப் படை. கடந்த - வென்ற. செரு - போர். சங்கம் - கற்றோர் கூடும் இடம். பூழியர்கோன் - பாண்டியன். இளவல் - தம்பி. வேழம் - யானை. சீர் - பெருமை

வினாக்கள் :

1. பண்டைக் காலத்தில் தமிழகம் எவ்வாறு இருந்தது?
2. குமரிக் கண்டத்தைப் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?
3. கடைச் சங்கத்தைப் பற்றி நான்கு வாக்கியங்கள் கூறுக.
4. தமிழகத்தின் எல்லைகள் யாவை?
5. தமிழகம் எவ்வாறு யாரால் ஆளப்பட்டு வந்தது?
6. கரிகால் வளவன் யார்? அவன் செய்த சிறந்த செயல் யாது?
7. பாண்டிய நாட்டின் சிறப்புகளைச் சுருக்கிக் கூறுக.
8. சேர நாட்டை ஆண்ட சிறந்த மன்னன் யார்? அவனைப் பற்றி அறிந்ததைக் கூறுக.
9. தற்காலக் கவிஞர்கள் யார் யார்?
10. பாரதியார் தமிழகத்தை எவ்வாறு சிறப்பித்துள்ளார்?

பயிற்சி :

1. தமிழகம் வட வேங்கடம், தென்குமரி, கடற்கரை, தன்னளவு, செந்தமிழ்,—இவற்றைப் பிரித்துக் காட்டுக.

2. அ + இடை, செம்மை + கோல், தெற்கு + நாடு, இளங்கோ + அடிகள், வில் + கொடி, இன்பம் + தேன் — இவற்றைச் சேர்த்து எழுதுக.

3. பண்டைக் காலம், மூழ்கி விடல், எல்லை, மாவட்டம், கண்டம், மொழி, தலைநகரம், கடற் கரை, இளவல், மாலை — இவற்றை வைத்துச் சொந்த வாக்கியங்கள் கூறுக.

4. எதிர்ச் சொற்கள் கூறுக:—

1. முற்காலம். 2. பண்டை. 3. செங்கோல்.
4. வென்ற. 5. சிறப்பு. 6. சுருங்கி.

5. வட்டம் - மாவட்டம், நாடு - கண்டம், — இவை கட்குள்ள வேறுபாடுகளை அறிக.

6. பூர்த்தி செய்க:—

மரபு	தலை நகரம்	கொடி	மாலை
1. சேரர்.	சேர நாடு	வில்	பனம் பூ
2. சோழர்.			
3. பாண்டியர்.			

இலக்கணம்:

நாம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் எழுத்து தேவையாக இருக்கின்றது. எழுத்துதான் மொழி தோன்றுவதற்கு முதற் காரணம் ஆகும்.

ஆ, ஈ, பூ, கா —இவற்றைச் சொல்லும்பொழுது ஒலி வருகின்றதைக் கேட்கிறோம். அப்பொழுது இவ்வெழுத்துக்கள் ஒலி வடிவத்தைப் பெறுகின்றன.

இவற்றை எழுதும்பொழுது கண்ணால் காண்கிறோம். அப்பொழுது இவை வரி வடிவம் பெறுகின்றன.

ஆகவே, எழுத்துக்கு ஒலி வடிவம், வரி வடிவம் என்னும் இரண்டு வடிவங்கள் உண்டு.

2. மாணவர் செஞ்சிலுவைச் சங்கம்

1. மாணவர் என்ற சொல் மாட்சிமை உடையவர் என்ற பொருளைத் தருவதாகும். நற்குண, நற்செய்கைகளாகிய மாட்சிமையை உடையவரே மாணவராவார். மாணவர் கல்வி கற்றுக்கொள்ளுவதொன்றையே தம் நோக்கமாகக் கருதக் கூடாது. மாணவர் செய்ய வேண்டிய செயல்கள் பல உள்ளன. நாட்டுக்கும், சமூகத்துக்கும் மாணவர் தொண்டுசெய்யவேண்டும். சுத்தம், சுகாதாரம் எனும் இரண்டையும் முதலில் தாங்கள் கடைப்பிடித்தொழுகி, மற்றவர்க்கும் அவற்ருல் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறித் திருத்த வேண்டும். நல்ல ஒழுக்கமுடையவராய், தன்னலங் கருதாது தொண்டாற்றுதல் வேண்டும். மாணவரிடம் இத்தகைய சிறந்த பண்பாடுகள் இருப்பதையே யாவரும் விரும்புவர்.

2. மாணவர்க்குப் பள்ளிகளில் கல்வி கற்றுக் கொடுப்பதோடு வேறு சில பயிற்சிகளும் அளிக்கப்படு கின்றன. குடிமைப் பயிற்சி, தேகப் பயிற்சி, சாரணர் குழுப் பயிற்சி, பாதுகாப்புப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி என்னும் இவைகளில் மாணவர் மனமகிழ்வோடு பங்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இவைகளுக் கென மாணவர் மன்றம், சாரணர் இயக்கம், செஞ் சிலுவைச் சங்கம், தேசீய மாணவர் படை முதலியவை பள்ளிகளில் நடத்தப்படுகின்றன. இவைகளால் பேச்சாற்றல், நல்லொழுக்கம், தொண்டாற்றல், தூய்மை, ஒற்றுமை உணர்ச்சி முதலான நலன்களை மாணவர்கள் அடைகிறார்கள்.

3. இப்பொழுது எல்லா ஊர்களிலும் பெரும் பாலும் செஞ்சிலுவைச் சங்கம் இருப்பதைக் காணலாம். 1859-ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டு மன்னனான மூன்றும் நெப்போலியன் இதாலியரோடு போராடி வெற்றி பெற்றான். போரில் இருதிறத்திலும் பலர் படு காயம் உற்றனர். காயமுற்ற வீரர்கள் போர்க்களத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்தனர். அப்போர்க்களத்தின் வழியாக ஹென்றி டியூனண்ட் என்பவர் தற்செயலாக வர நேரிட்டது. இவர் சுவிஸ் நாட்டுப் பெரியார் ஆவார். போர்க்களத்தின் கோரமான காட்சி இவருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. உடனே விரைவாகச் சென்று சிலரை உதவிக்கு அழைத்துக்கொண்டு காய முற்ற பலருக்கும் உதவி செய்து அவர்களைப் பிழைக்க வைத்தார்.

4. பின்பு ஹென்றி டியூனண்ட் போர்க்களத்தில் காயமுற்றவர்க்கு உதவி செய்வதற்கென ஒரு

சங்கத்தைத் துவக்கினர். அச்சங்கத்தில் பலர் அங்கத்தினராகச் சேர்ந்தனர். ஹென்றி டியூனண்ட் சுவிஸ் நாட்டவராதலின், தம் நாட்டுக் கொடியின் சின்னமாகிய சிவப்புச் சிலுவையையே சங்கத்தின் கொடியாகவும் அமைத்தார். அச்சங்கம் **செஞ்சிலுவைச் சங்கம்** என்று அழைக்கப்பட்டது. எவ்வித வேறுபாடுமின்றிப் போரில் இரு திறத்தார்க்கும் உதவி செய்வதே அச்சங்கத்தின் நோக்கமாகும். நாளடைவில் அச்சங்கம் நன்கு வளர்ச்சியடைந்தது.

5. முதியவர்கள் சேர்ந்து பணியாற்றுவதைக் கண்டு இளைஞர்கட்கும் அச்சங்கத்தில் **ஆர்வம்** ஏற்பட்டது. அதன் பயனாக 1914-ஆம் ஆண்டில், **கானடா** நாட்டிலுள்ள **கியூபெக்** என்ற மாகாணத்தில் இளைஞர்கள் ஒன்று கூடி **இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்** என்று ஒரு சங்கத்தைத் துவக்கினர். அச்சங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர் பெரும்பாலும் மாணவர்களேயாவர். போர்முனையில் காயமடைந்தவர்களுக்கேயன்றி மற்றைய வழிகளால் துன்பம் அடைந்தவர்க்கும் உதவி செய்யலாயினர். இயல்பாகவே சுறுசுறுப்புமிக்க மாணவர்கள் அச்சங்கத்தில் சேர்ந்து தொண்டு செய்வதைப் பெரிதும் விரும்பினர். இச்செய்திகளையறிந்த மற்றைய நாட்டு மாணவர்களும் தத்தம் நாடுகளிலும் செஞ்சிலுவைச் சங்கத்தை அமைத்துக் கொண்டனர்.

6. நம் நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப் பட்டது. இப்பொழுது இச்சங்கத்தின் கிளைகளை எங்கும் காண்கிறோம். சங்கத்தின் தலைமைக் காரியால

யம் புதுடெல்லியில் உள்ளது. தற்பொழுது பல கலா சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் 'செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7, செஞ்சிலுவைச் சங்கம் யாவருக்கும் பொது வான ஒரு சங்கமாகும். சாதி, மத, நிற வேறுபாடுகள் இச்சங்கத்தில் இல்லை. நாட்டுக்குத் தொண்டு செய்ய விரும்புவோர் யாவரும் இதில் உறுப்பினர் ஆகலாம். சங்கத்தில் சேர்ந்தபின் சங்கத் தலைவர் இட்ட கட்டளைப் படி நடக்கவேண்டும். சுகாதார வளர்ச்சி, ஒற்றுமைக்குப் பாடுபடுதல், பிறர்க்குச் சலிக்காது உதவி செய்தல் என்னும் இம்மூன்றும் சங்கத்தின் முக்கியமான கொள்கைகளாகும்.

8. இச்சங்கத்தில் சேர்ந்தவர்க்கு, இடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், பிறர்க்கு உதவி செய்தல், ஒழுக்கத்தைப் பாதுகாத்தல், நோயாளிகளைப் பாதுகாத்தல், முதல் உதவி செய்தல் முதலியவைகட்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற சங்கத்தார் வேறு சில செயல்களையும் செய்தல் வேண்டும். சாலை களில் ஆணிகள், கண்ணாடித் துண்டுகள், கூர்மையான கற்கள் இருப்பின் அவைகளை அப்புறப்படுத்த வேண்டும். வழி தெரியாதவர்க்கு வழிகாட்டி உதவ வேண்டும். நீரில் மூழ்கியவனைக் காப்பாற்றி முதலுதவி செய்தல் வேண்டும். குருடர், முடவர் முதலானவர் களின் நிலைமைக்கு இரங்கித் துணைபுரிதல்வேண்டும். பெருவெள்ளம், தீ முதலிய விபத்துக்கள் ஏற்பட்ட போழ்து விரைந்து சென்று உதவுதல் வேண்டும். நோயாளிகட்கு ஆறுதல் சொல்லி உறுதுணையாக விளங்கவேண்டும்.

9. செஞ்சிலுவைச் சங்கம் சமூக சேவை செய்யும் ஒரு சங்கமாகும். இதனல் நாட்டுக்குப் பல நன்மைகள் விளையும். இத்தகைய சீரிய பணியில் யாவரும் பங்கெடுத்துக்கொண்டு உழைக்கலாம். சமத்துவம், சகோதரத்துவம் முதலான பண்புகளை வளர்க்கலாம். எனவே மாணவர் உலகிற்கு இச்சங்கம் ஏற்றதொரு வழிகாட்டியாகும்.

சொற்பொருள் :

மாட்சி - சிறப்பு. தொண்டு - சேவை. பண்பாடு - பழக்கம். குழு - கூட்டம். துவக்கினர் - தொடங்கினர். பணியாற்றல் - சேவை செய்தல். போர் முனை - போர்க்களம். கிளை - பிரிவு. அப்புறப்படுத்த - நீக்க. உறுதுணை - மிக்க உதவி. துணை புரிதல் - உதவி செய்தல். சமத்துவம் - யாவரும் ஒன்று என்ற நிலை. சகோதரத்துவம் - யாவரும் சகோதரர் என்ற மனப்பான்மை. மன்றம் - சபை. சின்னம் - அடையாளம்.

வினக்கள்:

1. மாணவர் என்போர் யார்? அவர் கடமைகள் யாவை?
2. பள்ளியில் மாணவர்க்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள் யாவை?
3. செஞ்சிலுவைச் சங்கம் எப்பொழுது யாரால் ஏற்படுத்தப் பட்டது?
4. செஞ்சிலுவைச் சங்கம் என்று பெயர் வரக் காரணம் என்ன?
5. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் எங்கே எப்பொழுது தோன்றியது?
6. செஞ்சிலுவைச் சங்கத்தின் சிறப்புகள் யாவை?
7. சங்கத்தார் செய்ய வேண்டிய செயல்களைக் கூறுக.
8. செஞ்சிலுவைச் சங்கத்தை மாணவர் உலகிற்கு வழிகாட்டி என்று எவ்வாறு சொல்லலாம்?

பயிற்சி :

1. நற்குணம், தன்னலம், தொண்டாற்றல், முதலுதவி, பேச்சாற்றல், பணியாற்றல், காரியாலயம்,—இச் சொற்களைப் பிரித்துக் காட்டுக.

2. நல் + செய்கை. சுக + ஆதாரம். செம்மை + சிலுவை. காயம் + உற்ற. உறு + துணை — இச்சொற்களைச் சேர்த்து எழுதுக.

3. சுறுசுறுப்பு — இங்கு இரண்டு சொற்கள் தொடர்ந்து வந்துள்ளன. இவற்றைப் பிரித்துக் கூறக்கூடாது. பிரித்தால் பொருள் தராது. இதைப்போன்ற வேறு சில சொற்கள்:— சலசலப்பு, முணமுணப்பு, துடிதுடிப்பு, கலகலப்பு.

4. தத்தம்— இந்தச் சொல் தம் + தம் என்ற இரு சொற்கள் சேர்ந்து வந்த சொல்லாகும். இதனைப் பிரித்துக் கூறலாம். பிரித்தால் பொருள் தரும். இதைப் போன்ற வேறு சொற்கள்:— நன்று நன்று, பாம்பு பாம்பு, ஓடு ஓடு, தீத்தீ.

5. நற்குணம், பண்பாடு, தொண்டு, ஒற்றுமை, படுகாயம், சேவை, சின்னம், சுறு சுறுப்பு,— இவைகளை அமைத்து வாக்கியங்கள் கூறுக.

6. செஞ்சிலுவைச் சங்கத்தில் செய்யப்படும் செய்கைகளை நடித்துக் காட்டுக.

இலக்கணம் :

1. உயிர் எழுத்துக்கள் 'அ' முதல் 'ஔ' வரை பன்னிரண்டு ஆகும். அவற்றுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் ஓசையில் குறைந்து ஒலிக்கின்றன. ஆதலால் இவைகட்குக் குறில் எழுத்துக்கள் எனப் பெயர். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் ஓசையில் நீண்டு ஒலிக்கின்றன. ஆதலால் இவைகட்கு நெடில் எழுத்துக்கள் எனப் பெயர்.

2. மெய் எழுத்துக்கள் 'க்' முதல் 'ன்' வரை பதினெட்டு எழுத்துக்களாம். அவற்றுள்.

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லினம் எனப்படும்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லினம் எனப்படும்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையினம் எனப்படும்.

3. உயிரும் மெய்யும் கூடி உயிர் மெய் பிறக்கிறது. உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுடன் தனித்தனியே சேர்வதால் $12 \times 18 = 216$ உயிர்மெய் எழுத்துக்கள் பிறக்கின்றன

4. ஃ-இது ஆய்த எழுத்து எனப்படும். அடுப்புக் கட்டிபோல் மூன்று புள்ளி வடிவாக இது எழுதப்படுகிறது.

5. எனவே உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆகமொத்தம் 247 எழுத்துக்கள் தமிழில் உள்ளன.

3. வானொலி



பிள்ளைகளே! நாம் இருபதாம் நூற்றாண்டில் வசிக்கிறோம். இந்த நூற்றாண்டில் நாம் எத்தனையோ விதமான புதுமைகளைக் காண்கிறோம். போக்கு வரவிற்காகப் புகைவண்டி, மோட்டார், மின்சார இரயில் வண்டி முதலியவற்றைக் காண்கிறோம். வானவழியே விரைந்து செல்லும் ஆகாய விமானத்தைக் காண்கிறோம். கடலைக் கடந்து செல்லும் கப்பல்களைக் காண்கிறோம். வெகுதூரத்தில் இருக்கும் ஒருவருடன் பேசுவதற்குப் பயன்படும் தொலைபேசி (டெலிபோன்) யைக் காண் கிறோம். விசையைத் தட்டிய மாத்திரத்தில் ஒளிபரப்பி யும், பெரிய பெரிய இயந்திரங்களை இயக்கியும், பல தொழில்களை விரைவாகச் செய்தும் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும் மின்சாரத்தைக் காண்கிறோம். கடல் நடுவிலிருந்தும், வானத்திலிருந்தும் செய்தி அறிவிக்க உதவும் கம்பியிலாத் தந்தியைப் பற்றிப்

படிக்கிறோம். ஒரே நொடியில் உலகம் முழுவதையும் அழிக்கும் சக்தி வாய்ந்த அணுகுண்டைப் பற்றிப் படிக்கிறோம். மருத்துவ முறையில் பற்பல முன்னேற்றங்களைக் காண்கிறோம். உடலைப் பற்றியும், தாவரங்களைப் பற்றியும், உயிரினங்களைப்பற்றியும் புதிய புதிய ஆராய்ச்சிகள் வெளிவருகின்றன. ஆடை வகைகளிலும் ரேயன், நைலான், பிளாஸ்டிக் முதலியவற்றைக் காண்கிறோம். இவைகளெல்லாம் எதனால் ஏற்பட்டவை? விஞ்ஞானிகளின் விடாமுயற்சியால் தோன்றியவையே இவைகள். விஞ்ஞானத்தினால் உலகம் எவ்வளவோ பயன்களைப் பெற்றது; பெற்று வருகின்றது; இனியும் பெறும்.

2. இக்காலத்தில் பெரும்பாலான வீடுகளிலும் பூங்காக்களிலும் ரேடியோ இருப்பதைக் காண்கிறோம். நாள் முழுவதும் உழைத்து, அலுத்துச் சலித்து வரும் மக்களுக்கு உற்சாகத்தை யூட்டுகிறது ரேடியோ. ரேடியோவின் மூலம் இன்னிசையைக் கேட்கிறோம். இசைத்தட்டுக் கீதங்களைக் கேட்கிறோம். உள்ளத்தைத் துள்ளவைக்கும் நாடகங்களையும், உணர்ச்சி நிரம்பிய இலக்கியப் பேச்சுக்களையும் கேட்கிறோம். மற்றும் உள்நாட்டுச் செய்திகள், அயல்நாட்டுச் செய்திகள், கிராம முன்னேற்றத்திற்கான செய்திகள் ஒலிபரப்பப் படுகின்றன. ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கெனத் தனித்தனியான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. எனவே யாவருக்கும் எத்துறையிலும் பயன்படுகின்றது ரேடியோ.

3. உலகப் படத்தைப் பார்த்தால் ஐரோப்பாக் கண்டத்தில் இதாலி என்றொரு தேசம் இருப்பதைப்

பார்க்கலாம். அத்தேசத்திலுள்ள போலோக்ஞ என்னும் நகரில் 1874-ஆம் ஆண்டில் **'மார்க்கோனி'** பிறந்தார். இளமைப் பருவத்தில் கற்கத்தக்கவைகளையெல்லாம்

மார்க்கோனி

கற்ருர். விஞ்ஞான ஆராய்ச்சியில் அவர் மனம் ஈடு பட்டது. அதன் பயஞக அவர், ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குக் கம்பியில்லாமலேயே செய்திகளை அனுப்பலாம் என்று கண்டு பிடித்தார். அதற்குக் **'கம்பியிலாத் தந்தி'** என்று பெயர். இத்தந்தி முறையால் கடலில் கப்பலில் செல்லும்போழ்தும், ஆகாயத்தில் விமானத்தில் பறந்து செல்லும்போழ்தும் ஆபத்து ஏற்பட்டால் உடனே செய்தியை அனுப்பித் தப்பித்துக் கொள்ளலாம்.

4. மார்க்கோனி அத்துடன் நின்றுவிடாமல் மேலும் ஆராய்ச்சி செய்தார். காற்றில் உள்ள ஈதர் எனப்படும் பொருள் மூலம் விரைவாக ஒலி பரவுகிற தல்லவா! ஓரிடத்தில் நடைபெறும் இசைநிகழ்ச்சி

யையோ, பேச்சையோ ஈதரில் கலக்கச் செய்து, தேவை யான இடத்தில் மீண்டும் பெறலாம் என்று அவர் கண்டுபிடித்துக் கூறினர். இம்முறையில் வான் வழியே ஒலி செலுத்தப்படுவதால் இதனை **'வானொலி'** என்று யாவரும் அழைத்தனர்.

5. இவ்வாராய்ச்சியை ஒட்டி, **'எடிசன்'** என்ற விஞ்ஞானப் பெரியார், தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார். ஈதரில் கலந்த ஒலியை மீண்டும் பெற்று

எடிசன்

ஒலியை வெளியிடும் பெட்டி ஒன்றைக் கண்டுபிடித்தார். இதனையே நாம் **'ரேடியோ'** என்று அழைக்கிறோம்.

6. இனி ரேடியோ மூலம் எவ்வாறு செய்தியைப் பெறுகிறோம் என்று நோக்குவோம். செய்திகளும், நிகழ்ச்சிகளும் நடைபெறும் இடத்தை 'வானொலி நிலையம்' என்பர். அந்நிலையத்தில் பல அறைகள் உள்ளன. அறையின் சுவர்கள் எதிரொலி ஏற்படாத

வாறும், வெளி ஒலி உள்ளே நுழையாதவாறும் அமைக்கப்பட்டிருக்கும். பாடுபவர் அவ்வறையில் உள்ள ஒலி வாங்கும் கருவி (மைக்)யின் முன் அமர்ந்து பாடுவார். அவ்வொலி மின்சாரத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு வேருெரு இடத்தை அடையும். அவ்விடத்தில் அவ்வொலி பெரிதாக்கப்பட்டு உயர மான கம்பங்களில் அமைந்திருக்கும் கம்பிகளின் மூலம் ஈதரில் கலக்கப்படுகிறது. இவ்விடத்திற்கு **'ஏரியல் நிலையம்'** என்று பெயர்.

7. ரேடியோ உள்ள ஒவ்வொரு வீட்டிலும் உயர மான இரு கம்பங்களில் கம்பியொன்று கட்டப்பட்டிருப் பதைப் பார்க்கலாம். அதற்கு 'ஏரியல்' என்று பெயர். ஈதரில் கலந்த ஒலி காற்றின் மூலம் அலைகளாகப் பரவிச் சென்று ஏரியலில் வந்து மோதுகின்றன. பின் ரேடியோப் பெட்டி மூலம் அவ்வொலி இழுக்கப்பட்டு நமக்கு வெளியிடப்படுகிறது. ஒலியைப்பெரிதாக்கவோ, சிறிதாக்கவோ ரேடியோப் பெட்டியில் விசையிருப் பதைக் காணலாம். அதனைத் திருப்பி, ஒலியை நாம் விரும்பியபடி மாற்றி அமைத்துக் கேட்கலாம்.

8. வானெலிக்கு 'ஆகாய வாணி' என்றெரு பெயரும் உண்டு. வானெலியால் நாட்டில் கல்வி பெருகி வருகிறது. ஒரு நாட்டிற்கும், மற்றெரு நாட்டிற் கும் தொடர்பு அதிகரித்து வருகிறது. உலகத்தின் எப்பகுதியிலும் நடக்கும் பேச்சுக்களையும், நிகழ்ச்சிகளை யும் கேட்க முடிகிறது. கடலில், வானில் எங்கு ஆபத்து ஏற்பட்டாலும் அருகிலுள்ள நாட்டிற்குச் செய்தி அனுப்பித் தப்ப முடிகிறது. இவைகளால்

உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் சாதனமாக வானொலி விளங்குவதனை உணரலாம்.

9. வாழ்க்கையின் பல துறைகளிலும் பயன்படும் வானொலியையும், ரேடியோப் பெட்டியையும் கண்டு உதவிய மார்க்கோனி, எடிசன் இருவரையும் உலகம் மறக்கமுடியாது. அவர்கட்கு என்றும் உலகம் கடமைப் பட்டதாகும்.

சொற்பொருள் :

இருபதாம் நூற்றூண்டு - 1901 முதல் 2000 வரை இருபதாம் நூற்றூண்டு என்று சொல்லப்படும். வானவழி - ஆகாயவழி. இயக்கி - ஓடச்செய்து. நொடி - கைவிரலைச் சொடுக்கும் நேரம். கீதம் - பாட்டு. துறை - வழி. ஒட்டி – தொடர்ந்து. அமர்ந்து - உட்கார்ந்து. விசை - பித்தான். சாதனம் - கருவி.

வினாக்கள் :

1. விஞ்ஞானத்தால் ஏற்பட்டுள்ள புதுமைகள் யாவை?
2. ரேடியோ யாவருக்கும் பயன் தருவது எவ்வாறு?
3. மார்க்கோனி எத்தேசத்தவர்? அவர் கண்டு பிடித்தவை யாவை?
4. எடிசன் கண்டறிந்து கூறியது யாது?
5. ஏரியல் நிலையத்தின் வேலை என்ன?
6. வானொலியை 'உலகை ஒன்று படுத்தும் சாதனம்' என்று எப்படிக் கூறலாம்?
7. குறிப்பு எழுதுக:— 1. கம்பியில்லாத் தந்தி. 2. ஏரியல்.

பயிற்சி :

1. நூற்றூண்டு, வானவழி, உலகப்படம், எதிரொலி, பெரிதாக்க — இவைகளைப் பிரித்து எழுதுக.

2. இனிமை + இசை, இசை + தட்டு, வான் + ஒலி, சிறிது + ஆக்க — இவைகளைச் சேர்த்து எழுதுக.

3. கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி.
ரேடியோவைக் கண்டு பிடித்தவர் எடிசன்.
தந்தியைக் கண்டு பிடித்தவர் மோர்ஸ்.
நீராவி எஞ்சினைக் கண்டு பிடித்தவர் ஸ்டீவன்சன்
மோட்டாரைக் கண்டுபிடித்தவர் ஹென்றி போர்டு
ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர் ரைட் சகோதரர்கள்

4. நூற்றுண்டு, அணுகுண்டு, பூங்கா, இசைத்தட்டு, இசை, நிலையம் – இச்சொற்களை வாக்கியங்களில் அமைக்கவும்.

5. ஒலி - ஒளி, வலி - வளி, கலி - களி, புலி – புளி, பல்லி - பள்ளி, — இவைகளுக்குள்ள வேறுபாட்டைக் கவனிக்க.

[ஒலி - ஓசை, ஒளி - வெளிச்சம், வலி - நோவு, வளி - காற்று. புலி – ஒருவகை விலங்கு, புளி - உணவுப்பொருளுக்கு வேண்டிய ஒன்று, கலி - வறுமை, களி - ஒருவகை உணவு, பல்லி - ஒருவகைப் பிராணி, பள்ளி - பள்ளிக்கூடம்]

இலக்கணம் :

1. அவன், இவன், உவன்.
அது, இது, உது.
அந்த, இந்த, உந்த.

இவற்றில் அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் முதலில் நின்று சுட்டிக்காட்ட உதவுகின்றன.

அ, இ, உ என்னும் மூன்றும் சுட்டுப் பொருளில் வந்து ஒன்றைச் சுட்டிக்காட்டுமாதலால் 'சுட்டெழுத்து' எனப்படும்.

2. எவன்? யார்?
நீயா? கண்டாயோ?
ஏது? செய்வார்யாரே?

இவற்றில் எ, யா என்னும் எழுத்துக்கள் முதலிலும், ஆ, ஓ என்னும் எழுத்துக்கள் கடைசியிலும், ஏ என்பது முதலிலும் கடைசியிலும் வந்து வினாக்களாக நிற்கின்றன,

எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்தும் வினாப்பொருளில் வந்து வினவப்படுமாஞல் 'வினாவெழுத்து' எனப்படும்.

3. எடிசன் ரேடியோவைக் கண்டுபிடித்தார்.
எருது வயலை உழுதது.

இவ்விரு வாக்கியங்களிலும் தொழில் முற்றுப் பெற்றுநிற்கும் இடம் 'கண்டுபிடித்தார்,' 'உழுதது' என்னும் இரண்டுமாகும். இதனைப் 'பயனிலை' என்பர்.

பயனிலையைக் கொண்டு யார்? அல்லது எது? என்று வினவ வேண்டும். யார் என்று வினவும் போது 'எடிசன்' என்றும், எது என்று வினவும் போது 'எருது' என்றும் விடை கிடைக்கிறது. ஆகவே செயலைச் செய்யும் எடிசனும், எருதும் எழுவாய் ஆகும்.

பின் எதனை ? அல்லது யாரை ? என்று வினவவேண்டும். எதனை? என்று வினவும்போது 'ரேடியோவை' என்றும், 'வயலை' என்றும் விடை கிடைக்கிறது. 'ஆகவே ரேடியோவை,' 'வயலை' என்பன செயப்படுபொருளாம்.

4. ஔவையார் தூது

(நாடகம்)

காட்சி - 1

இடம் : அரச அவை.
காலம் : காலை.
உள்ளோர் : அதிகமான் நெடுமான் அஞ்சி, ஔவையார், அமைச்சர் முதலியோர்.

[அதிகமான் அரியணையில் வீற்றிருக்கிறான். அவனுக்கு அருகில் ஔவையார் தகுந்த ஆதனத்தில் அமர்ந்திருக்கிறார். அமைச்சர்கள் தத்தம் ஆதனங்களில் உட்கார்ந்துள்ளனர்.]

[காவலன் ஒருவன் வருகிறான்.]

காவலன்: (வந்து வணங்கி) அரசே! தொண்டை நாட்டிலிருந்து ஒற்றன் வந்திருக்கிறான்.

அதிகமான்: சரி, வரச்சொல்.

[காவலன் போனபின் ஒற்றன் வருகிறான்]

ஒற்றன்: (வணங்கி) வேந்தே வாழ்க! தொண்டை நாட்டு வேந்தர் நம் நாட்டின் மீது படையெடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

அதிகமான்: (பற்களைக் கடித்து) அப்படியா!...........நீ போகலாம். (ஒற்றன் போனபின்) அமைச்சரே! கேட்டீரா செய்தியை? போரை விளையாட்டென நினைத்துவிட்டான் போலும் தொண்டைமான். அவனுக்குச் சரியான பாடம் புகட்டவேண்டும்.

அமைச்சர்: மன்னவா! என் சொற்களையும் சிறிது கேட்டருளவேண்டும். தாங்கள் கோபிக்காமல் தீர ஆலோசிக்கவேண்டும். போரினால் ஏற்படக் கூடிய தீமைகளோ அதிகம். ஆதலால்......

அதிகமான்: ஆதலால் நான் பணிந்து சமாதானம் செய்து கொள்ளவேண்டுமென்கிறீர்?

அமைச்சர்: அப்படிச் சொல்லவில்லை அரசே! போரைத் தடுக்க வழி செய்யவேண்டும் என்கிறேன்.

அதிகமான்: போருக்குப் பயந்த கோழை என்றல்லவா நினைத்து விடுவான் தொண்டைமான்.

அமைச்சர்: அவ்விதம் நினையாதிருக்க நமது படை வலிமையை அவனுக்குத் தூதன் மூலம் உணர்த்தி விடுவோம் மன்னவா!

அதிகமான்: ஆம். அது தான் சரி; அவ்வாறே செய்வோம்.

அமைச்சர் : *மற்றுமொன்று. தூது செல்பவர் அறிவு மிக்கவராகவும், பேச்சில் வல்லவராகவும் இருக்க வேண்டும். உறுதியான மனமும், துணிவும் கொண்டவராக இருக்கவேண்டும். உயிருக்கு ஆபத்து வந்தாலும் அஞ்சாமல் இருக்கவேண்டும்.*

அதிகமான் : *இவை யாவும் ஔவையாரிடமே அமைந்துள்ளன. (ஔவையாரை நோக்கி) தமிழ்த் தாயே! தாங்கள் நாட்டின் பொருட்டுத் தூது சென்று வரவேண்டும். அதற்குத் தகுதியுடையவர் நீரே.*

ஔவையார் : *என்ன!...... ..நானு!.........கிழவியாகிய என்னுல் இப்பொறுப்பை எவ்வாறு வெற்றிகர மாகச் செய்ய முடியும்?*

அதிகமான் : *தாங்கள் இதனை மறுக்கக்கூடாது. தடை சொல்லாது சென்று வரவேண்டும் என்பதே என் விருப்பம்.*

ஔவையார் : *அதியா! உன் விருப்பப்படியே செய்கிறேன். கவலை கொள்ளாதே.*

[ஔவையார் செல்கிருர்]

காட்சி – 2

இடம் : தொண்டைமான் அவை
காலம் : மாலை
உள்ளோர் : தொண்டைமான், அமைச்சர், ஔவையார் முதலியோர்

தொண்டைமான் : *அமைச்சரே! தகடூரை நோக்கிப் படை எடுக்கப் படைகள் ஏற்பாடாகிக் கொண்டிருக்கின்றனவா ?*

அமைச்சர் : எல்லாம் சித்தமாகிக் கொண்டிருக்கின்றன.

தொண்டைமான் : அதிகமானும் அதிகமான். எல்லோரும் ஒருமிக்கப் புகழ்கிறார்களே. பார்த்து விடுகிறேன் அவன்வீரத்தை. கொடையில் வல்லவனும்! படையில் வல்லவனா! என்று பார்க்கிறேன்.

[வாயிற்காவலன் வருகிறான்.]

காவலன் : (வந்து வணங்கி) அரசே! வாயிலில் ஒரு அம்மையார் வந்துள்ளார்.

தொண்டைமான் : அம்மையாரா!.......சரி. வரச்சொல்.

[காவலன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஔவையார் வருகிறார்.]

தொண்டைமான் : (ஆதனத்தை விட்டெழுந்து) ஔவையாரா! வரவேண்டும்! வரவேண்டும்! தங்கள் வரவால் என் நாடு சிறப்படைந்தது, அமருங்கள்.

ஔவையார் : (அமர்ந்தபின்) மன்னவா! நீ நீடூழி வாழ்க!

தொண்டைமான் : தாங்கள் வந்ததால் என் அரண்மனை புனிதமடைந்தது. தங்கள் வருகை எனக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

ஔவையார் : உன்னை நெடுநாளாகக் காணவேண்டுமென்று ஆசை கொண்டிருந்தேன். அவ்வாசை இன்றுதான் நிறைவேறியது.

தொண்டைமான் : அன்னையே! தாங்கள் இன்று இரவு இங்கு தங்கி விருந்துண்டு செல்லலாம்.

ஔவையார் : அப்படியே ஆகட்டும்.

காட்சி - 3

இடம் : அரண்மனைக்கூடம்.
காலம் . காலை.
உள்ளோர் : தொண்டைமான், ஔவையார்.

ஔவையார் : *தொண்டைமானே! உன் அன்பு என்னைக் கட்டுப்படுத்திவிட்டது. உன்னை இதுகாறும் அறியாமல் போய்விட்டேன்.*

தொண்டைமான் : *அம்மையே! அரண்மனையைச் சுற்றிக் காட்டுகிறேன்; வாருங்கள்.*

ஔவையார் : *அப்படியே போவோம்.*

தொண்டைமான் : *(சிலவற்றைக் காட்டி) இவை மகத நாட்டுச் சிற்ப வேலைப்பாடுகள். இவை கலிங்க நாட்டு ஓவியர்களின் கலைத்திறமான ஓவியங்கள்.*

ஔவையார் : *இவைகளெல்லாம் பார்ப்பதற்கு வெகு நேர்த்தியாக இருக்கின்றன. உன் அரண்மனையின் அழகு என் அகத்தைக் கவர்கிறது.*

தொண்டைமான் : *அருந்தமிழ் அன்னையே! நான் மிகவும் பாடுபட்டுக் கட்டிய படைக்கலக் கொட்டிலையும், அங்குள்ள ஆயுதங்களையும் தாங்கள் காணவேண்டும். கண்டால் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள்!*

ஔவையார் : *அப்படியா! அதனையும் பார்ப்போமே.*

தொண்டைமான் : *வாருங்கள். காட்டுகிறேன்.*

காட்சி - 4

இடம் : படைக்கலக் கொட்டில்.
காலம் : காலை.
உள்ளோர் : தொண்டைமான், ஔவையார்.

தொண்டைமான் : (படைக்கலக் கொட்டிலைக் காட்டி) இது என் முயற்சிக்கு ஒரு சான்று. இங்குள்ள ஆயுத வகைகளைப் பாருங்கள் (காட்டிக்கொண்டே வருகிறான்.)

ஔவையார் : அரசனே! ஆயுதங்களை எல்லாம் வரிசை வரிசையாக அழகுற வைத்திருக்கிறாய். மயில்இறகு சூட்டி அலங்கரித்திருக்கிறாய். மலர் மாலைகளால் அழகுபடுத்தியிருக்கிறாய்.

தொண்டைமான் : (மகிழ்ச்சியோடு) மேலும் சொல்லுங்கள்!

ஔவையார் : ஆயுதங்களின் பிடிகள் அழகாகவும், திண்மையாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. இவை துருப்பிடிக்காமலிருக்க நெய் பூசியிருக்கிறாய். பளபளப்புக் குறையாமல் பார்ப்பவர்களுக்குப் பளிச் செனத் தோன்றுமாறு வைத்திருக்கிறாய். இவற்றைக் காத்துவர நல்ல காவலும் இருக்கிறது. ஆனால்...........

தொண்டைமான் : (திடுக்கிட்டு) ஆனால் என்ன? ஏன் நிறுத்திவிட்டீர்கள்?

ஔவையார் : (பெருமூச்சுடன்) உன் ஆயுதங்களைப் போல அதிகமானின் ஆயுதங்கள் இல்லை. அவை

அடிக்கடிப் பகைவரைக் குத்துவதாலும், வெட்டுவதாலும் ஒடிந்தும் மழுங்கியும் போய்விட்டன. ஆதலால் அவை பழுது பார்க்கும் பொருட்டுக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன.

தொண்டைமான் : ஔவையே! ஆயுதங்கள் கிடக்கட்டும். அதிகமான் வீரர்கள் என் நாட்டு வீரர் போல் ஆவாரோ?

ஔவையார் : அப்படிக் கேள்! அடிக்கும் கோலுக்கும் அஞ்சாதவர்கள் அதிகமான் வீரர்கள். போரென்றால் புலிபோலப் பாய்வர்; நாகமெனச் சீறி எழுவர். அதுமட்டுமல்ல. வெளியூர்களிலிருந்து வந்து தங்கும் இரவலர்கள் தங்கள் மத்தளங்களை மரத்தில் தொங்கவிட்டுவிட்டுப் படுத்துத் தூங்குவர். மரத்தில் வாழும் மந்திகள் அம்மத்தளங்களைத் தட்டித் தட்டி மகிழும். அவ்வோசையைக் கேட்டதும் போர் முரசு அடிக்கிறது என்று பூரிப்படைவார்கள். அவர்களைப்பற்றி எளிதாக எண்ணிவிடாதே. வீரர்களே இப்படி என்றால் அதிகமானைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

தொண்டைமான் : அம்மையே! என்னை மன்னித்து விடுங்கள். செருக்கினால் சீரழிந்து இருந்தேன். எனக்கு அறிவு புகட்டினீர்கள். இனிப் போரைக் கைவிட்டுப் புகழுக்கு வழி தேடுவேன்.

ஔவையார் : நீ வாழ்க. உன் மாற்றம் கண்டு மகிழ்கிறேன். எனக்கு விடை கொடு. போய் வருகிறேன்.

தொண்டைமான் : சென்று வாருங்கள். வணக்கம்.

சொற்பொருள் :

காட்சி 1. அரியணை - சிங்காதனம். ஆதனம் – ஆசனம். புகட்ட - போதிக்க. நீர - நன்றாக. கோழை – தைரியமில்லாதவன். துணிவு - தைரியம்.

காட்சி 2. சித்தம் - தயார். கொடை - பொருள் கொடுத்தல் புனிதம் - தூய்மை. விருந்து - உணவு.

காட்சி 3. இதுகாறும் - இதுவரையிலும். ஓவியம் - சித்திரம். நேர்த்தி - அழகு. அகம் - மனம். படைக்கலக் கொட்டில் – ஆயுதங்கள் சேகரித்து வைத்துள்ள இடம்.

காட்சி 4. சான்று–உதாரணம். திண்மை–உறுதி. இரவலர்–யாசிப்பவர். மந்திகள்-குரங்குகள். பூரிப்பு-மகிழ்ச்சி. செருக்கு - கர்வம். சீர் - பெருமை. கைவிட்டு - விட்டு விடு. மாற்றம் - மனமாறுதல்.

வினாக்கள் :

1. அதிகமான் ஏன் தூது அனுப்ப நினைத்தான் ?

2. தூதர்களின் இயல்புகள் யாவை ?

3. தொண்டைமான் அரண்மனையில் ஔவையார்க்கு எவற்றைக் காட்டினான்? அப்பொழுது ஔவையார் என்ன சொன்னார் ?

4. படைக்கலக் கொட்டிலைக்கண்டு ஔவையார் கூறியன யாவை ?

5. அதிகமான் ஆயுதங்களைப் பற்றி ஔவையார் யாது கூறினார் ?

6. அதிகமானின் வீரர்கள் எப்படிப்பட்டவர்கள் ?

7. செருக்கு அழிந்த தொண்டைமான் ஔவையாரிடம் என்ன சொன்னான் ?

பயிற்சி :

1. ஆதனம், கோழை, புனிதம், நேர்த்தி, பூரிப்பு, செருக்கு — இவைகளை வாக்கியங்களில் பயன்படுத்துக.

2. அகம், இரவலர், கோழை, கொடை — இவைகட்கு எதிர்ச்சொற்கள் கூறுக.

3. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறுக:—

1. தொண்டைமான் சித்திரத்தைக் காட்டினான்.
2. ஔவையார் படைக்கலக் கொட்டிலைப்பார்த்தார்.

4. இந்நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.

5. ஔவையாருக்கும் தொண்டைமானுக்கும் நடந்த பேச்சுக்களைக் கதைபோல எழுதுக.

இலக்கணம் :

1. பூ, தா, மை, ஈ :— இந்நான்கில் 'பூ, தா, ஈ,' என்னும் மூன்றும் பொருள் தருகின்றன. 'மை' பொருளைத்தரவில்லை.

2. மலர், வண்டு, டகுடிகு, கழபுழ — இவற்றுள் முதல் இரண்டு சொற்களில் எழுத்துக்கள் சேர்ந்து வந்து பொருள் தந்துள்ளன. பின்னிரண்டிலும் எழுத்துக்கள் சேர்ந்து வந்திருப்பினும் பொருளைத்தரவில்லை.

3. எழுத்து, தனியாகவும் தொடர்ந்தும் வந்து பொருளைத் தருமானால் 'சொல்' என்பப்படும்.

4. காவலன் வந்தான்.
அதிகமான் கோபித்தான்.

இவற்றுள் காவலன், அதிகமான் என்பன பெயர்களைக் குறிக்கின்றன ஆதலால், 'பெயர்ச்சொல்' எனப்படும்.

5. வந்தான், கோபித்தான் என்பன செய்த வேலையைக் குறிக்கின்றன ஆதலால், 'வினைச்சொல்' எனப்படும்.

6. சொற்களில் பெயர்ச்சொல் என்றும், வினைச்சொல் என்றும் இருவகைகள் உண்டு.

5. பாரதிதாசனார்

URA TAMIL SANGAM
652

1. கவிதை பாடுவதென்பது சிறந்த ஒரு கலையாகும். கவிஞன் தான் கண்ட காட்சிகளையும், அனுபவித்த உணர்ச்சிகளையும் அமைத்துப் பாடல்கள் பாடுகின்றான். அதனையே நாம் கவிதை என்கிறோம். கவிதையின் மூலம் நாட்டு மக்களுடைய உள்ளத்தைத் தட்டி எழுப்பலாம். சிறந்த கருத்துக்களை எளிய முறையில் மக்கள் மனத்தில் பதியவைக்கலாம். தெள்ளத் தெளிந்த நடையில் உண்மைகளைப் பரப்பலாம். நாள் முழுவதும் உழைத்துப் பாடுபடும் மக்களுக்கு உற்சாகத்தைத் தருகின்றது கவிதை எனலாம்.

2. தித்திக்கும் தீந்தமிழில் பல கவிஞர்கள் கவிதைகள் பாடியுள்ளார்கள். கவிதைகளை முதன் முதலில்

பாடிக் காட்டியவர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். ஆதலால் இவரைக் **'கவிதையுலகத் தந்தை'** என்று கூறுவர். இவர் காட்டிய வழிப்படிச் சிலர் கவிதை பாடத் தொடங்கினர். அவர்களிற் சிறந்தவர்கள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல்கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவியோகி சுத்தானந்த பாரதியார், கவிஞர் பாரதிதாசனர் முதலியோராவர். கவிஞர் பாரதிதாசனர் பாரதியாரின் மாணவருமாவார்.

3. கவிஞர் பாரதிதாசனரின் இயற்பெயர் சுப்புரத்தினம் என்பதாம். இவர் புதுச்சேரியிற் பிறந்தவர். இவருடைய தந்தையார் கனகசபை முதலியார் ஆவார். இவரை யாவரும் கனகசுப்புரத்தினம் என்று அழைத்தனர். "இளமையிற் கல்" என்னும் முதுமொழிக்கேற்ப, இளமைப் பருவத்தை வீணடிக்காமல் கல்வியைப் பயின்றார். இனிமையாகப் பாடும் குரலும் இவருக்கு உண்டு. இவர் தாய்மொழியாகிய தமிழில் பற்றுக்கொண்டு அதனை நன்கு கற்றார். கவிஞர் பாரதியாரிடத்து இவருக்கு அளவு கடந்த மரியாதையும், மதிப்பும் ஏற்பட்டது. பாரதியாரின் பாடல்களை உணர்ச்சியோடு பாடிக் காட்டுவார். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே நாடகங்களிற் சேர்ந்து நடித்ததால் நடிப்புப் பயிற்சியும் இவருக்கு உண்டு.

4. கல்வி கற்று முடிந்த பின்பு இவர் தமிழாசிரியராகப் பணி ஏற்றார். தமிழ்மொழியிடத்து இவர் அளவிலா ஆர்வம் உடையவராதலின் மாணவரிடத்துத் தமிழ்ச் சுவையை யூட்டினர். தாமே சில பாடல்களைப் பாடவும் தொடங்கினர்.

5. இதற்கிடையில் பாரதியார் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அவரைக் காணவேண்டும் என்று அளவிலா ஆர்வமுடன் சென்றார். சிலர் இவரைப் பாரதியார்க்கு அறிமுகம் செய்து வைத்தனர். பாரதியார் இவரை ஒரு பாடல் பாடச் சொன்னார். உடனே இவர் பாரதியாரின் பாடலான **"எங்கெங்கும் காணினும் சக்தியடா"** என்று தொடங்கும் பாடலை உணர்ச்சியுடன் பாடிக் காட்டினார். அதைக் கேட்டு மகிழ்ந்த பாரதியார் இவரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டார். அது முதல் இவர் **'பாரதிதாசன்'** என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதலானார். இயற்கை வருணனைகளையும், சிறந்த கருத்துக்களையும் கொண்டிருந்தமையால் இவருடைய கவிதைகள் மக்கள் உள்ளத்தில் நன்கு பதிந்தன.

6. பாரதியாரைப் போலவே இவரும் சீர்திருத்த வாதி; முற்போக்கான கருத்துக்களையுடையவர். பாரதிதாசன் பல நாட்கள் சிந்தித்துச் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த **"புரட்சிக் கவிஞன்"** என்ற நாடக நூல் ஒன்றை எழுதினார். அது வெளியிடப்பட்டபின் மக்கள் அதனைப் பெரிதும் போற்றினர். விழாவொன்று நடத்தி, அவ்விழாவில் பாரதிதாசனுக்குப் "புரட்சிக் கவிஞர்" என்ற பட்டம் சூட்டிச் சிறப்புகள் செய்தனர்.

7. இவர் தனித்தனியே பல கவிதைகள் பாடியிருப்பதோடல்லாமல், சில நூல்களையும் இயற்றியிருக்கிறார். **பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு** என்னும் இரு நூல்களிலும் இவரது கவிதையின் சிறப்பைக் காணலாம். தமிழ் நூல்கள் பற்றிச் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவர் எழுதியுள்ளார். இவரது கவிதை

களில் ஓசை நயத்தையும், பொருளாழத்தையும், மிடுக்கையும் நாம் காணலாம். உணர்ச்சிகள் துள்ளுவதைக் காணலாம். புதுமையான கருத்துக்கள் பொலிவுறக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். இயற்கை வருணனைகளையும், அன்றாட வாழ்க்கைநிகழ்ச்சிகளையும்காணலாம்.

8. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் சிறந்தவர் இவர். சமூகம் நன்கு முன்னேறவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். எத்துறையிலும் மறுமலர்ச்சியைக் (புது வழி) காணவேண்டும் என்ற அவா இவருக்கு உண்டு. தமிழ் மொழிக்குப் பலவகைகளில் ஆக்கம் தேடவேண்டும் என்று அடிக்கடிச் சொல்லுவார். சொல்வதைச் செயல்முறையில் செய்தும் காட்டுவார். இவருடைய சிறப்பியல்புகளை உணர்ந்த தமிழ்நாட்டார் இவர்க்குப் பொன்னுடை போர்த்தினர். பொன் முடிப்பு அளித்து மகிழ்ந்தனர். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவர் புதுச்சேரியில் வாழ்ந்து வருகிறார்.

9. "நிமிர்ந்த நடை, நேரான நோக்கு, கருத்து அடர்ந்த மீசை, பருத்து அகன்ற மார்பு, ஒளிகாட்டும் கண்கள், உரம் மிக்க உள்ளம், எதனையும் கூர்ந்து நோக்கும் சக்தி, மனதில் உள்ளதைத் தைரியமாக எடுத்துக் கூறும் ஆற்றல், எவ்விடத்தும் யாவருக்கும் அஞ்சாத இயல்பு" — இவை யனைத்தையும் இவரிடத்து நாம் காணலாம்.

10. பாரதியார் காட்டிய வழிப்படி நடந்து செல்லும் இவரைத் 'தென்னாட்டுப் பெர்னாட்ஷா' என்றும் சிறப்பித்துள்ளனர். கவிஞர் பாரதிதாசனார் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டிற்கும் மொழிக்கும் தொண்டு செய்வாராக.

சொற்பொருள் :

உற்சாகம் - மகிழ்ச்சி. தீந்தமிழ் - இனிமையான தமிழ். கல் – கற்றுக்கொள். முதுமொழி – பழமொழி. பற்று – ஆசை. பணி – வேலை. ஆர்வம் –ஆசை. அறிமுகம்–தெரியப்படுத்துதல். தாசன் – தொண்டன். சூட்டி - அளித்து நயம் - இனிமை. பொலிவு அழகு. ஆக்கம் -நல்லமுன்னேற்றம். உரம்–உறுதி. ஆற்றல் - சக்தி.

வினாக்கள் :—

1. கவிதையாவது யாது? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. 'கவிதை யுலகத்தந்தை' என்று போற்றப்படுபவர் யார்? ஏன்?
3. தமிழ்க்கவிஞர் நால்வர் யார் யார்?
4. பாரதிதாசனின் இளமை வாழ்க்கை எவ்வாறு இருந்தது?
5. 'பாரதிதாசன்' என்ற பெயர்வரக் காரணம் என்ன?
6. 'புரட்சிக்கவிஞர்' என்று ஏன் இவர் அழைக்கப்பட்டார்?
7. பாரதிதாசன் பாடிய இரண்டு சிறந்த நூல்கள் எவை? இவருடைய பாடல்கள் எத்தகையவை?
8. பாரதிதாசனின் சிறப்பு இயல்புகள் யாவை?
9. இவரிடத்து நாம் எவ்வெவற்றைக் காணலாம்?
10. இவரை யாருக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்?

பயிற்சி :

1. உற்சாகம், தித்திக்கும், பற்று, ஆர்வம், அறிமுகம், தைரியம் — இச்சொற்களை வைத்து வாக்கியங்கள் வரைக.

2. முதுமை + மொழி, தீம் + தமிழ், அ + நூல், பொருள் + ஆழம், பேச்சு + ஆற்றல், தெற்கு + நாடு —இவற்றைச்சேர்த்து எழுதுக.

3. பொன்னுடை, தமிழாசிரியர், அளவிலா, அவ்விழா, முத்தமிழ், எழுத்தாற்றல்— இச்சொற்களைப் பிரித்துக்காட்டுக.

4. கோடிட்ட இடத்தை நிரப்புக :—

1. கவிதை பாடுபவன் ——
2. ஓவியம் வரைபவன் ——
3. புலமை உடையவன் ——
4. தொண்டு செய்பவன் ——

5. எதிர்ச்சொல் கூறுக:—

உண்மை ×
தித்திக்கும் ×
விருப்பம் ×
புதுமை ×

இலக்கணம்:

1. 'இலாகா' — இது அரேபிய மொழிச் சொல்லாகும். இவ்வாறு பிறமொழிச்சொற்கள் தமிழில் வந்து கலந்துள்ளன. அவற்றைத் '**திசைச்சொல்**' என்பர்.

ஆசாமி, வசூல், முனிசிப் — அரேபிய மொழிச் சொற்கள்
தபால், அசல், பங்களா — இந்தி மொழிச் சொற்கள்.
அலமாரி, சுமார், மேஜை — பாரசீக மொழிச் சொற்கள்.

2. தருணம் — இது வடமொழிச் (சம்ஸ்கிருத மொழி) சொல்லாகும். தமிழ் மொழியில் வடமொழிச் சொற்கள் நிரம்பவும் கலந்துள்ளன. அவற்றை 'வடசொல்' என்பர்.

அமலன், கமலன், அரி, இலக்குமி, அரசன், அனுமான்— இவை வட சொற்களாம்.

3. நாம் பேசும் பொழுது சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் பேசுகிறோம். அவ்வாறு பேசுவது கூடாது. படிக்கும்பொழுதே திருத்தமாகப் பேசிப் பழகவேண்டும்.

பிழை	திருத்தம்
வேணும்	வேண்டும்
சுவற்றில்	சுவரில்
அமக்களம்	அமர்க்களம்
ஆத்துக்கு	அகத்துக்கு (வீடு), ஆற்றுக்கு (ஆறு)
கண்ணாலம்	கல்யாணம்
வாளெக்கா	வாழைக்காய்
தண்ணி	தண்ணீர்
கருவப்பிலே	கறிவேப்பிலை
நேத்து	நேற்று.

6. கங்கை கொண்ட காவலன்



1. மேலேயுள்ள படத்தில் நீங்கள் காண்பது **தஞ்சைப் பிரகதீச்சரர்** கோயிலாகும். இக் கோயிலைத் **'தஞ்சைப் பெரியகோயில்'** என்றும் சொல்வர். பல அழகிய சிற்பங்களை இக்கோயிலில் நாம் காணலாம். இங்குப் பழங்கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதையும் காண லாம். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மிகப்பெரிய நந்தியை நாம் இங்கு பார்க்கலாம். படத்தில் காணப்படும் விமானத்தின் நிழல் தரையில் படாதவாறு கட்டப்பட் டுள்ளது. இதனைக் கண்டு யாவரும் வியக்கின்றனர். சோழர் காலக் கட்டிடக்கலைக்கு இக்கோயில் சிறந்த தொரு எடுத்துக்காட்டாக உள்ளது. சிற்பக் களஞ்சிய மாகவும், சித்திரங்களுக்கு உறைவிடமாகவும் விளங்கி வருகிறது இது. இக்கோயிலைக் கட்டியவன் **'இராசராசன்'** என்ற சோழ மன்னன் ஆவான். இராசராசனை இக்

கோயில் கட்டப்பட்டதால் இதற்கு **'இராசராசேச்சரம்'** என்ற பெயரும் உண்டு.

2. இடைக்காலத்தில் அரசாண்ட சிறந்த மன்னர்களில் இராசராசனும் ஒருவனுவான். இவன் சிறப்புறத் தன் ஆட்சியை நடத்தினன். வடக்கே கலிங்க நாடு வரை இவன் ஆட்சி பரவியிருந்தது. இவனிடத்து மிகச் சிறந்த கப்பற்படை ஒன்றும் இருந்தது. அக்கப்பற்படையின் உதவியால் இலங்கைத்தீவு, மால்திவ் எனப்படும் இலட்சத்தீவுகள் —இவற்றை வென்ருன். இசையிலும், சமயத்திலும் மிகுந்த பற்று இவனுக்கு உண்டு. சிற்ப, சித்திரக் கலைகளை மிக ஆர்வத்துடன் இவன் வளர்த்தான். தன் பெயர், என்றும் நிலைத்திருக்குமாறு சிறப்புறத் தஞ்சைக் கோயிலைக் கட்டினன் இராசராசன். இவனுடைய மனைவியின் பெயர் **திரிபுவனமாதேவி** என்பதாகும். **குந்தவை** என்ற தமக்கையும், **குந்தவி** என்ற மகளும் இவனுக்கு இருந்தனர். அரச குடும்பத்தினர் **பழையாறை** என்ற நகரத்தில் வசித்துவந்தனர்.

3. இம் மன்னனுடைய மகனே **"கங்கை கொண்ட காவலன்"** எனச் சிறப்பிக்கப் பெறும் **இராசேந்திரன்** ஆவான். இராசேந்திரன் பழையாறை அரண்மனையில் தான் வளர்ந்தான். குந்தவை மாதேவியார் இராசேந்திரனுக்கு வீரத்தையும், சமயப்பற்றையும் ஊட்டி வளர்த்தார். பழையாறை கும்பகோணத்திற்கு அருகில் தற்பொழுது ஒரு சிற்றூராக விளங்குகிறது. சோழர் காலத்தில் அது மிகப்பெரிய நகரமாக இருந்தது. இன்றும் பழையாறைக்கருகில் பழங்காலச் சின்னங்களைக் காணலாம்.

4. இராசேந்திரன் இளமைப்பருவத்தில் நல்ல முறையில் வளர்க்கப்பட்டதால், அவனுக்கு வீரமும்,

சமயப்பற்றும், கலை ஆர்வமும் தோன்றின. தகுந்த வயது அடைந்ததும் இராசேந்திரனுக்கு இராசராசன் இள வரசுப் பட்டம் சூட்டினான். இராசராசன் ஆட்சி செலுத்திய முப்பத்தொரு ஆண்டுகளும் அரசியலை இள வரசனாக இருந்தே இராசேந்திரன் நடத்தினான். அதனால் இவனுக்கு அரசாட்சி முறையில் நல்ல பயிற்சி உண்டா கியது.

5. கி. பி. 1012-ஆம் ஆண்டில் இராசேந்திரன் அரியணை ஏறினான். அப்பொழுது இவனுக்கு வயது நாற்பத்தைந்து. ஆட்சிக்கு வந்தபின் தந்தையைப் போலவே இவனும் சேர பாண்டியரை வென்று அடக்கினான். ஈழ நாட்டின்மீது படை எடுத்துச் சென்று வென்றான். அதனை ஆண்டுவந்த மகிந்தனைச் சிறைப்படுத்தினான். அவனுக்கு உரியதான மணி முடியையும், அரச சின்னங்களையும், மிகுந்த பொருட் குவியல்களையும் கைப்பற்றி மீண்டான். இவற்றால் இவனுக்கு '**முடிகொண்ட சோழன்**' என்ற பெயர் வந்தது.

6. தன் ஆட்சிக்குட்பட்ட நாட்டைப் பல பகுதிக ளாகப் பிரித்தான் இராசேந்திரன். ஆட்சி நலங்கருதி அவைகட்குத் தலைவர்களாகத் தம் புதல்வர்களையே வைத்தான். இதனால் புதல்வர்கட்கும் ஆட்சியில் பயிற்சியும் பொறுப்பும் உண்டாயின. ஆட்சியும் செவ்வனே நடைபெற்றது.

7. இராசேந்திரனுக்குக் கங்கை வரை சென்று வெல்லவேண்டும் என்ற ஆர்வம் எழுந்ததால், தன் படைத்தலைவனான **மாதண்ட நாயகன்** மூலம் ஒரு பெரிய படையை அனுப்பினான். படைத்தலைவன், போகும் வழியில் இருந்த இடைதுறைநாடு, மான்யகேடம்

இவற்றை வென்று அடிமைப் படுத்தினான். முயங்கி என்னும் இடத்தில் ஜெயசிம்மன் என்ற மேலைச் சாளுக்கிய அரசனைத் தோற்கடித்தான். ஒட்டர நாட்டு மன்னன் இந்திரனையும், கிழக்கு வங்காள மன்னன் கோவிந்தசந்தனையும் அடிப்படுத்திக் கப்பப்பொருள் பெற்றான். சோழர் படையின் சங்கநாதத்தைக் கேள்விப் பட்டு மேற்கு வங்காளத்தை ஆண்டுவந்த மகிபாலன் நாட்டைவிட்டு ஓடிவிட்டான். பின் கோசல மன்னனை யும் வென்று வாகை சூடினான். தன் வெற்றிக்கு



கங்கைகொண்ட சோழபுரக் கோயில்.

அடையாளமாகக் கங்கை நீர்க் குடங்களுடன் திரும்பி னான். இவ்வாறு வெற்றியோடு திரும்பி வந்த மாதண்ட நாயகனைக், கோதாவரி நதிக்கரையில் இராசேந்திரன் சந்தித்துச் சிறப்புகள் பல செய்தான். கங்கைவரை

சென்று வென்று வந்ததன் காரணமாக, இராசேந்திரனுக்குக் **'கங்கை கொண்ட சோழன்'** என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

8. கங்கை வெற்றியின் அறிகுறியாக ஒரு நகரை அமைத்து, அதற்குக் **கங்கைகொண்ட சோழபுரம்** என்று பெயரிட்டான். அதனையே தன் தலைநகரமாகவும் கொண்டான். அரச குடும்பத்தினர் இருந்து வாழக் **கங்காபுரம்** என்ற அரண்மனை ஒன்றைக் கட்டினான். நகரின் நடுவில் **"கங்கை கொண்ட சோழேச்சரம்"** என்ற கோயிலை எழுப்பினான். அக்கோயில் தோற்றத்தில் தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்றே அமைந்துள்ளது. ஆயினும் தஞ்சைக் கோயிலைவிட அழகான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது.

9. ஊருக்கு அருகில் **'சோழகங்கம்'** என்னும் மிகப் பெரிய ஏரி ஒன்றை வெட்டினான். அவ்வேரி இப்பொழுது **பொன்னேரி** என வழங்கப்படுகிறது. பதினாறு கல் நீளமுடையதாகவும், ஐந்து கல் அகலமுடையதாகவும் அது அமைக்கப்பட்டது. அதற்குத் தண்ணீர் வரக் கொள்ளிட நதியிலிருந்து அறுபத்தைந்து கல் நீளமுடைய பெரிய கால்வாய் ஒன்றும் வெட்டப்பட்டது. அவ்வேரியினால் நீர்வளம் பெற்றுச் சிறப்படைந்தது அப்பகுதி. சோழகங்கம் தற்பொழுது சிதைந்து போய்க் காணப்படுகிறது.

10. இராசேந்திரன் காலத்தில் சிறப்புடைய தலைநகரமாக இருந்த கங்கைகொண்ட சோழபுரம் தற்பொழுது உடையார்பாளையம் தாலூகாவில், பாழடைந்த சிறு கிராமமாகக் காணப்படுகிறது.

கும்பகோணத்திலிருந்து அரியலூர்க்குச் செல்லும் சாலை வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. கங்கைகொண்ட சோழேச்சரக் கோயிலும் பாழடைந்து இடிந்து கிடக்கிறது.

11. கங்கை கொண்டு வாகை சூடிய இராசேந்திரனுக்கு வாணிகத்தை வளப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதற்கேற்றவாறு கடார மன்னன் தமிழர் வாணிகத்துக்குத் தடைகளை உண்டாக்கினன். கடல் வாணிகத்துக்குத் தடை ஏற்பட்டது. அதனால் இராசேந்திரன் தனது கப்பற்படையின் உதவியால் கடல் கடந்து, சுமத்திரா தீவிலுள்ள ஸ்ரீவிசயம், மலையூர், பன்னை ஆகிய இடங்களையும், மலேயா தீபகற்பத்திலுள்ள பல இடங்களையும்வென்றான். தற்பொழுது 'கெட்டா' என்று வழங்கும்கடாரத்தை ஆண்ட மன்னனை வென்று சிறைப் படுத்தினன். இவ்வெற்றியினால் வாணிகம் பெருகி வளர்ந்தது. இவ்வெற்றியினால் இராசேந்திரனுக்குக் 'கடாரம் கொண்ட சோழன்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது.

12. இவ்வாறு சீரும் சிறப்பும் பொருந்த ஆட்சி நடத்திய இராசேந்திரன் தன் ஆட்சியில் கலை, வாணிபம், சமயம் இவற்றை வளர்த்தான். இவனுடைய புகழைக், கங்கை கொண்ட சோழபுரமும், கோயிலும் நமக்கு எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன.

சொற்பொருள் :

எடுத்துக்காட்டு - உதாரணம். சிற்பக்களஞ்சியம் - சிற்பங்கள் நிறைந்த இடம். உறைவிடம் - இருப்பிடம். கலிங்க நாடு - தற்பொழுதுள்ள ஒரிஸா மாகாணப் பகுதி என்பர்.

சின்னம் - அடையாளம். முடி - கிரீடம் (தலையில் அணிவது). செவ்வனே - நன்றாக. நாதம் - ஒலி. வாகை- வெற்றி. அறிகுறி- அடையாளம். சிற்பம் - கல்லில் செதுக்கப்பட்ட உருவம். கல் - மைல். சிதைந்து - இடிந்து. கப்பம் - வரிப்பொருள். காவலன் - அரசன்.

வினாக்கள் :

1. தஞ்சைக் கோயிலைப்பற்றி விவரமாக எழுதுக.
2. இராசராசசோழன் சிறப்புகள் யாவை ?
3. பழையாறை நகரத்தைப்பற்றி யாது அறிவாய் ?
4. இராசேந்திரன் எப்பொழுது அரியணை ஏறினான் ? ஏன் ?
5. 'முடிகொண்ட சோழன்' என்று பெயர் வரக்காரண மென்ன ?
6. கங்கை கொண்ட சோழன்' என்று எவ்வாறு பெயர் ஏற்பட்டது ?
7. மாதண்டநாயர் வென்ற மன்னர்கள் யாவர் ?
8. கங்கை வெற்றியின் அடையாளமாக இராசேந்திரன் செய்த செயல்கள் யாவை ?
9. கடாரத்தின் மீது இராசேந்திரன் படை எடுக்கக் காரணம் என்ன ? அதனால் அடைந்த சிறப்பு யாது ?
10. குறிப்பு எழுதுக :— 1. பொன்னேரி, 2. கங்கைகொண்ட சோழேச்சரம்.

பயிற்சி :

1. சிற்றூர், பாழடைந்து, பொன்னேரி, உறைவிடம், சங்கநாதம், கடப்பற்படை, அரியணை, நதிக்கரை—இச் சொற்களைப் பிரித்துக் காட்டுக.

2. இ + ஊர், சோழ + ஈச்சரம் தண்மை + நீர், பொருள் + குவியல், இள + அரசு — இவற்றைச் சேர்த்தெழுதுக.

3. தெரிந்துகொள்க :—

கங்கைகொண்ட சோழேச்சரம்
இராசராசேச்சரம் } இவை கோயிலின் பெயர்கள்.

4. உன் ஊரில் உள்ள கோயிலின் பெயர் — அதன் கண் உள்ள சிற்பங்களும், ஓவியங்களும் இவற்றைப்பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.

5. உன் ஊருக்கு அருகில் உள்ள சரித்திரப் பெருமை வாய்ந்த இடத்துக்குச் சென்று அங்குள்ளவற்றைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

6. கோடிட்ட இடத்தை நிரப்புக :—

1. இராசேந்திரன் வெட்டிய ஏரி ————.
2. தஞ்சைப் பெரிய கோயிலில் மிகப் பெரிய———— ஒன்று உள்ளது.
3. கடாரம் ———— தீபகற்பத்தில் உள்ளது.
4. இராசராசனின் மனைவியின் பெயர் ————.
5. கங்கைகொண்ட சோழபுரம் ——— தாலூகாவில் உள்ளது.

இலக்கணம் :

1. 1. இராசேந்திரன் கோயிலைக் கட்டினன்.

2. கங்கை நீர்க்குடங்களைச் சுமந்து வந்தான்.

3. கடாரம் கொண்ட சோழன்.

இவ்வாக்கியங்களைக் கவனி. முதல் வாக்கியத்தில் 'கட்டினன்' என்ற சொல் தடித்த எழுத்துக்களில் காணப் படுகிறது. 'கட்டினன்' என்பது ஒரு தொழில் முற்றுப் பெற்றதைக் குறிக்கிறது.

2. ஒரு தொழில் முற்றுப்பெற்றதைக் குறிக்கும் சொல் **வினைமுற்று** எனப்படும்.

3. இரண்டாம் வாக்கியத்தில் உள்ள '**சுமந்து**' என்ற சொல் முடிவடையாமல் 'வந்தான்' என்ற சொல்

லைக்கொண்டு முடிவு பெற்றுள்ளது. வந்தான் என்பது வினைமுற்றுச்சொல்.

4. ஒரு சொல் முடிவு பெறுமல் நிற்குமானுல் அது **'எச்சம்'** என்று பெயர் பெறும். எச்சம் முடியும் போழ்து பெயரைக் கொண்டும், வினையைக் கொண்டும் முடியும்.

5. 'சுமந்து' என்பது வந்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துளதால் 'வினை எச்சம்' எனப்படும். ஒரு எச்சம் வினையைக்கொண்டு முடியுமானுல் வினை எச்சம் ஆகும்.

6. மூன்றுவது வாக்கியத்தில் உள்ள 'கொண்ட' என்ற சொல் சோழன் என்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. ஆதலின் 'கொண்ட' என்பது 'பெயரெச்சம்' எனப்படும். ஒரு எச்சம் பெயரைக் கொண்டு முடியுமானுல் பெயரெச்சம் ஆகும்.

7. கீழ் வருவனவற்றின் வேறுபாடுகளை அறிக:

கலை	—	களை	—	கழை
தலை	—	தளை	—	தழை
விரல்	—	விறல்		
சேரு	—	சேறு		
வாளை	—	வாழை		
மூலை	—	மூளை		
தவலை	—	தவளை		
கன்னி	—	கண்ணி		

8. திருத்தமாகக் கூறுக:—

1. கண்ணுக்குட்டி 2. வயித்தில் 3. பளக்க வளக்கம் 4. வாயப்பயம் 5. எம்பளது 6. நுப்பது.

THE MADURA TAMILSANGAM